Registered as a News paper பக்கங்கள் - 08 விலை - ரூபா 07

# ஈழநாதம்

மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்

Eezhanatham

நாதம் 01 திருவள்ளுவர் ஆண்டு 2035 ஐப்பசி 05 21.10.2004 வியாழக்கிழமை ஓசை 146

உங்கள் வியாபாரம் சிறக்க ஈழநாதத்தில் விளம்பரம் செய்யுங்கள்.

பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி:- 065-2226110
065-2226303

## வீரப்பனின் உடல் மனைவி விருப்பின்றி அக்கினியில் தகனம்

(டெல்லி)

தமிழக அதிரடிப்படையால் சுட்டுக்கொல்லப்பட்ட வீரப்பன் உடல் நேற்று தகனம் செய்யப்பட்டது

தர்மபுரியில் இருந்து நேற்று மாலை 6. 50 மணியளவில் வீரப்பனின் உடல் பலத்த பாதுகாப்புடன் மேட்டூர் கொண்டு செல்லப்பட்டது. மேச்சேரி வழியாக இரவு 8 மணியளவில் மேட்டூர் வந்து, அங்கிருந்து கொளத்துார் போகும் வழியில் 9 கி. மீ. , துாரத்தில் உள்ள மாதையனின் சொந்த ஊரான மூலக்காட்டில் உள்ள சுடுகாட்டிற்கு வீரப்பன் உடல் கொண்டு வரப்பட்டது. அங்கு ஏற்கனவே, தயாராக இருந்த தகன மேடையில் வீரப்பன் உடல் வைக்கப்பட்டது.

மூலக்காட்டில் தான் வீரப்பனின் தம்பி மறைந்த அர்ச்சுனனின்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)



## தேசவிரோதக் கும்பலுடன் தொடர்புடைய நபர் திருமலையில் சுட்டுக்கொலை!

(எஸ்.எஸ்.குமார்)

திருகோணமலை அன்புவெளி புரத்தில் உள்ள சயின்ஸ் சென்ரர் நிலையம் முன்பாக நேற்றிரவு 7.50 மணியளவில் கிருஸ்ணபிள்ளை லோகிநாதன் (25) என்பவர் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஸ்தலத்திலே மரணமாகியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலைக் பிரதேசத்தில் வசித்து வந்த இவர் இரண்டு மாதங்களுக்கு முன்னர் அன்புவெளிபுரத்தில் ஒரு தற்காலிக வாடகை வீடொன்றில் வசித்து வந்தாரெனவும் கடந்த காலங்களில் கருணாவின் தேசத்துரோக கும்பலுடன் நெருங்கிய தொடர்புடன் செயற்பட்டு வந்தவரெனவும் தெரியவருகிறது.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# வாகனேரி பகுதியில் கருணா கும்பலின் துப்பாக்கி சூட்டில் முஸ்லிம் நபர் பலி!

### துணைத் தளபதி பிரபா உண்மை நிலையை எடுத்துரைப்பு

(நமது நிருபர்)

**மட்டக்களப்பு மாவட்ட த்தின் வாகனேரிக் காட்டுப் பகுதியில் கருணாவின் தேசவிரோதக் கும்பல் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஓட்டமாவடியைச் சேர் ந்த முஸ்லிம் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.**

உயிரிழந்தவர் முகைதீன் கனிபா (33) எனத் தெரிவிக்கப்படுகிறது. இவரது சடலம் விடுதலைப்புலிகளால் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

வாகனேரி பிரதேசத்திலுள்ள விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் சட்ட விரோதமாக மரங்களை வெட்டி கடத்த முயன்ற போது விடுதலைப்புலிகளிடம் சிக்கியுள்ளனர்.

சட்டவிரோதமாக மரங்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## கல்முனை அரச அலுவலகத்தில் பெண்ணிடம் அடிவாங்கினார் ஊழியர்

(பாண்டிருப்பு நிருபர்)

கல்முனையில் அரச அலுவலகம் ஒன்றில் தொழில் புரியும் பெண் ஒருவரிடம் சேட்டை புரிய முற்பட்ட அதே அலுவலகத்தில் தொழில் புரியும் சக ஆண் ஒருவர் அப்பெண்ணிடம் செருப்பால் அடிவாங்கிய சம்பவம் ஒன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது கல்முனையில் கடமை

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## வெள்ளைப் பிரம்பு தினத்தையொட்டி கல்முனையில் விழிப்புணர்வு பேரணி

(எஸ்.டி.ஆர்.சலன்)

கல்முனை நகர லயன்ஸ் கழகம் நடாத்தும் சர்வதேச வெள்ளைப் பிரம்புதினம் நாளை மறுநாள் 23ம் திகதி சனிக்கிழமை கல்முனையில் இடம்பெறவுள்ளது.

சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்முனை ஸ்ரீ ராமகிருஸ்ணா மகா வித்தியாலயத்தில் இருந்து சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத் தையொட்டிய விழிப்புணர்வு ஊர் வலம் ஆரம்பமாகி கல்முனை கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலையினை வந்தடையவுள்ளது.

இந்நிகழ்வில் கல்முனை

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## அம்பாறை மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் கூட்டத்தில் கைகலப்பு!

(சரவணன்)

அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியக் கூட்டத்தில் ஏற்பட்ட கைகலப்பைத் தொடர்ந்து கூட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டது.

செவ்வாய்க்கிழமை மேற்படி கூட்டம் இணையத் தலைவர் என். மணிவாசகன் தலைமையில் அக்கரைப்பற்று இணையக் கட்டிட மண்டபத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த போது அண்மையில் பத்திரிகை ஒன்றில் வெளியான கட்டுரை தொடர்பான சர்ச்சையையடுத்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பின்னர் அயலில் இருந்து நிறுவனங்களின் அதிகாரிகள் அவ்விடம் விரைந்து வந்து கைகலப்பில் ஈடுபட்டவர்களை சமரசத்திற்கு கொண்டு வந்தனர். பின்னர் கூட்டம் மீண்டும் 11.30 மணியளவில் கூடியது.

## பிரபோதினி அமைப்பு ஊடகவியலாளர் மாநாடு

(ஹரிச்சந்திரன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெண்கள் நலன் பேணும் செயற்திட்ட நிறுவனமான ''பிரபோதினி'' அமைப்பு இன்று காலை 9.00 மணியளவில் மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில் எகெட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் பத்திரிகையாளர் மா்நாடு ஒன்றை நடாத்தவுள்ளது.

## கிங்ஸ்லி ராசநாயகத்தை கருணாவின் தேசவிரோதிகளே சுட்டுக்கொன்றனர்

### சம்பவத்துக்கு விடுதலைப்புலிகள் கண்டனம்

(நமது நிருபர்)

கருணாவின் தேசவிரோதக் கும்பலால் கிங்ஸ்லி இராசநாயகம் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை தமிழீழ விடுதலைப்புலிகள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

அத்துடன் அவர்களது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு. அம்பாறை அரசியல் பிரிவு அறிக்கை ஒன்றைவிடுத்துள்ளது.

ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கிறோம். எனும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டும் பதவி ஏற்காமலே பதவியிலிருந்து ஒதுங்கிக் கொண்ட கிங்ஸ்லி ராசநாயகம் அவர்கள் தேசவிரோத சக்திகளான கருணா கும்பலால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இக்கொலையை வன்மையாகக் கண்டிக்கிறோம். சிறந்த கல்விமானான இவர் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தின் இணைப்பாளராகவும் பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து கொள்கின்றோம்.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## முன்னாள் இராணுவ அதிகாரி தெகிவளையில் சுட்டுகொலை!

(நமது நிருபர்)

கொழும்பு தெகிவளையில் முன்னாள் இராணுவ கப்டன் மொகமது ஹசீன் செவ்வாய் இரவு இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

வாகனத்தில் சென்று கொண்டிருந்த சமயம் இவர் மீது இத்துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே இராணுவ புலனாய்வுத்துறையில் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் பணியாற்றிய இவர், இவரது சில நடவடிக்கைகள் காரணமாக சேவையிலிருந்து நீக்கப்பட்டார்.

பாதாள உலகக் கோஷ்டியுடன் தொடர்புடைய சம்பவங்கள் காரணமாக இக்கொலை இடம் பெற்றிருக்கலாம் என கருதப்படுகின்றது.

### இன்றைய நாளில்

**தகவற்துளி**

இந்தியப் படையினர் யாழ். வைத்தியசாலையில் வைத்தியர்கள், தாதிமார் உட்பட 21 அப்பாவித் தமிழர்களை படுகொலையை நிகழ்த்திய நாள் (1987)

மார்ஷல் தீவுகள் சுதந்திர நாள் (1986)

## செய்தித் துளிகள்

### புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி

(பாண்டிருப்பு நிருபர்)

பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயத்தில் 03 மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

தயாபரன் ஹர்சனி 130, துசாரன் தேவன் 129, துரைசிங்கம் துஷாங்கன் 127 ஆகியோர் மேற்படி புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளதாக அதிபர் ஆர்.கோபால பிள்ளை தெரிவித்தார்.

### மின்சார விநியோகம்

(தாசன்)

நாவிதன்வெளிப் பிரதேசத்தில் மின்சார வசதியினைப் பெறாத கிராமங்களான, வீரச்சோலை, 7ம் கிராமம், அன்னமலை வீட்டுத்திட்டம் ஆகிய கிராமங்களில் மின்சாரம் வழங்கும் வேலைகள் தற்போது நடைபெற்று வரு கின்றது.

### செயலமர்வு

(தாசன்)

பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்களை கற்பிக்கும் யுனிசெப் செயற்திட்ட சம்மாந்துறை வலய போதனாசிரியர்களுக்கான செயலமர்வு சது-விவேகானந்தா மகா வித்தியாலயத்தில் சம்மாந்துறை வலய செயற்திட்ட பொறுப்பாளரும், உதவிக் கல்விப் பணிப்பாளருமான ஜனாப் எம்.ஏ.அப்துல் றசூல் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இச்செயலமர்வில் கல்முனை யுனிசெப் மாவட்ட செயற்திட்ட இணைப்பாளர் கே.எம்.நஜிமுடின் அவர்களும், சம்மாந்துறை வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜனாப், எஸ்.எல்.ஏ.சலாம் அவர்களும், பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஜனாப் எம்.எச். அஸீஸ் அவர்களும் நாவிதன்வெளிக் கோட்டக் கல்வி அதிகாரி திரு.ந.குணசேகரம் அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினர். இச்செயலமர்வில் சம்மாந்துறை வலய நாவிதன்வெளிக் கோட்டத்தில் யுனிசெப் நிறுவனத்தினரால் நியமனம் செய்யப்பட்ட 40 போதனாசிரியர்களும், பாடசாலை அதிபர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

### அப்பியாசக் கொப்பிகள் வழங்கல்

(பாண்டிருப்பு நிருபர்)

அம்பாறை மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு இலவச அப்பியாசக் கொப்பிகளை வழங்குவதற்காக தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் க.பத்மநாதன் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக அம்பாறை மாவட்ட அறநெறிப் பாடசாலைகளின் ஒன்றியத் தலைவர் ஆ.சசீந்திரன் தெரிவித்தார்.

க.பத்மநாதன் எம்.பி.தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் இருந்து 60 ஆயிரம் ரூபாவை அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு இலவசக் கொப்பிகளை வழங்குவதற்கு ஒதுக்கீடு செய்துள்ளார்.

### செயற்திட்டம்

(தாசன்)

இடைத்தர தொழில்நுட்ப சங்கக் குழுவினர் நாவிதன்வெளிப் பிரதேச சுவாட் அலுவலகத்துடன் இணைந்து மத்தியமுகாம்-03, மத்தியமுகாம்-04, ஆகிய கிராமங்களில் உயிர் வாயு தயாரித்தல், உணவு பதனிடல் ஆகிய செயற்திட்டத்தினை அமுல்படுத்தி வருகின்றனர். விலங்குகளின் கழிவுகளை எடுத்து 10 அடி அகலம் 07 அடி ஆழமான ஓர் தாங்கியில் இட்டு உயிர் வாயுவினைத் தயாரிக்கின்றனர். இவ் வாயுவினைப் பயன்படுத்தி சமையல், மின்குமிழ் எரிய வைத்தல் ஆகியவற்றினை செய்கின்றனர். இதன் மூலம் வரும் கழிவினைப் பயன்படுத்தி இயற்கை விவசாயம் மற்றும் வீட்டுத் தோட்டம் செய்கின்றனர்.

# நோர்வே வெளிவிவகார அமைச்சர் பீற்றர்ஸன் விரைவில் கொழும்பு வருகை

(நமது நிருபர்)

**சமாதானப் பேச்சை மீள ஆரம்பிப்பதற்காக மற்றொரு சுற்று முயற்சிகளில் நேரடியாக ஈடுபடுமாறு ஜனாதிபதி விடுத்த வேண்டுகோளை அடுத்து, நோர்வே அனுசரணைக்குழுவின் சார்பில் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்ஸனே நேரடியாகக் கொழும்பு வரவிருக்கின்றார்.**

நவம்பர் மாதத்தில் - பெரும்பாலும் நடுப்பகுதியில் - அவர் கொழும்பு வருகின்றார். இந்த விஜயத்தின்போது அவர் கிளிநொச்சிக்கும் சென்று புலிகளின் தலைவர்களைச் சந்திப்பார் எனத் தெரிகின்றது.

தடைப்பட்டுள்ள அமைதிப்பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பாகக் கொழும்புக்கான நோர்வேத் தூதுவரும், அனுசரணைக் குழுவின் உறுப்பினருமான ஹான்ஸ் பிரட்ஸ்கரை அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமது ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்துப் பேசியிருந்தார்.

அந்தப் பேச்சுக்களின்போது, நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்ஸன் இவ் விடயத்துக்காக இலங்கைக்கு நேரில் வருவது நல்லது என்ற தமது அபிப்பிராயத்தை ஜனாதிபதி வெளியிட்டார் எனத் தெரிகின்றது.

வெளிவிவகார அமைச்சர் பீற்றர்ஸனே நேரில் வந்து அரசுத் தரப்புடனும், கிளிநொச்சியில் புலிகள் தரப்புடனும் பேசி, பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான வழிவகைகளைக் காண வேண்டும் என ஜனாதிபதி குமாரதுங்க கோரினார்.

இந்தத் தகவல் ஒஸ்லோவுக்குத் தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து, நிலைமையை ஆராய்ந்த ஒஸ்லோ அரசு, வெளிவிவகார அமைச்சரை இலங்கைக்கு நேரில் அனுப்பிவைக்க இணங்கியதாகக் கூறப்படுகின்றது.

பெரும்பாலும் அடுத்த மாத நடுப்பகுதியில் பீற்றர்ஸன், புதிய பேச்சு முயற்சிகளை ஆரம்பிப்பதற்காகக் கொழும்பு வருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

செவ்வாயன்று லண்டனில் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தை, அவரது லண்டன் இல்லத்தில் நோர்வே அனுசரணைக்குழுவின் பிரதிநிதிகளான எரிக் சொல்ஹெய்ம் மற்றும் கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோர் சந்தித்துப் பேசியபோது வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்ஸனின் உத்தேச கொழும்பு விஜயம் குறித்து அவருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும் அறியவந்தது.

தமது கொழும்பு விஜயத்தின்போது அரசுத் தரப்பையும், புலிகளையும் சந்திக்கும் பீற்றர்ஸன், பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு வழி செய்யும் திடமான நடவடிக்கைகளை முன்னெடுப்பார் என்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.

தற்போது நோர்வே சென்றிருக்கும் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தலைமையிலான புலிகளின் அரசமைப்பு விவகாரக் குழு, அங்கு வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்ஸன், பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல் கிஸன் மற்றும் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோரைச் சந்தித்துப் பேசுகின்றது.

அப்போது ஜோன் பீற்றர்ஸனின் உத்தேச இலங்கை வருகை பற்றியும் அதையொட்டிய ஏற்பாடுகள் மற்றும் நோக்கங்கள் ஆகியவை பற்றியும் கூட ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.



உலக அஞ்சல் தினத்தையொட்டி செங்கலடி தபாலகத்தின் ஏற்பாட்டில் செங்கலடி மத்திய கல்லூரியின் கலையரங்கில் நடைபெற்ற அஞ்சல் தின விழாவில் செங்கலடி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் வே.கனேசநாதன் (நடுவில் நிற்பவர்) விழாவின் பிரதம அதிதியான கிழக்கு மாகாண பிரதி அஞ்சல் மாஅதிபர் கிங்ஸ்லி விமலரெட்னவிடம் செங்கலடி தபாலகத்திற்கு ஐந்து கதிரைகளை கையளிப்பதையும், செங்கலடி தபாலதிபர் திருமதி. குரூஸ்கிருபைராணி அவர்கள் பெற்றுக் கொள்வதையும் படத்தில் காணலாம்.

(படமும், தகவலும்:- கே.வாமதேவன்)

## புங்குடுதீவு ஆஸ்பத்திரி புனரமைப்புக்கு அபிவிருத்திச் சபை அமைக்க ஏற்பாடு

(நமது நிருபர்)

1990ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கை மற்றும் இடப்பெயர்வினையடுத்து பாரிய சேதமடைந்துள்ள புங்குடுதீவு அரசினர் மாவட்ட மருத்துவமனையைப் புனரமைப்பதற்கு வைத்தியசாலை அபிவிருத்திச்சபை ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

கடந்த 14ஆண்டுகளாக முழுமையாக இயங்காதிருந்த இந்த வைத்தியசாலை, அண்மையில் நிரந்தர வைத்திய அதிகாரி மற்றும் ஊழியர்கள் நியமிக்கப்பட்டதையடுத்து முழுமையாக இயங்கி சேவையாற்றிவருகிறது. முழுமையாக இயங்கும் இவ்வைத்தியசாலையின் புனரமைப்புப் பணிகளை எளிதாக மேற்கொள்ள வசதியாக யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் இ.தெய்வேந்திரனின் ஆலோசனைக்கமைய இந்த அபிவிருத்திச்சபை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

இன்று வியாழக்கிழமை காலை 11மணிக்கு வைத்தியசாலை வெளிநோயாளர் மண்டபத்தில், வைத்தியசாலைப் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.இராசையா தலைமையில் அங்குரார்ப்பண வைபவம் இடம்பெறும்.

# புதிய ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் படைத் துறைக்கு அதிக நிதி

(நமது நிருபர்)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் முதலாவது வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கே ஆகக்கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவின் பொறுப்பிலிருக்கும் பாதுகாப்பு அமைச்சுக்கு 5 ஆயிரத்து 630கோடி ரூபாவும், ரத்னசிறி விக்கிரமநாயக்காவின் தலைமையிலான பொதுமக்கள் பாதுகாப்பு, சட்ட ஒழுங்குகள் அமைச்சுக்கு 2 ஆயிரத்து 35 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டில் பாதுகாப்பு அமைச்சுக்கு 5 ஆயிரத்து 208 கோடியே ஒதுக்கப்பட்டிருந்தது. நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம 2005ஆம் ஆண்டிற்கான செலவின் மதிப்பீட்டு அறிக்கையை நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அடுத்த நிதியாண்டிற்கான மொத்த செலவீனங்கள் 43 ஆயிரத்து 891 ரூபா என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் முதலாவது வரவு-செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் 18ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த அரசு ஆட்சிக்கு வரும்போது உறுதியளித்ததன்படி அரச ஊழியர்களுக்கு 70 வீத சம்பள உயர்வை வழங்கவும், சமுர்த்திக் கொடுப்பனவுகளை அதிகரிக்கவும், புதிய நியமனங்களை வழங்கவும் கூடியவகையில் அவற்றிற்கான விசேட நிதி ஒதுக்கீடுகள் எதுவும் காணப்படவில்லை. சுகாதார அமைச்சுக்கு 2 ஆயிரத்து 988 கோடிரூபாவும், கல்வி அமைச்சுக்கு 2 ஆயிரத்து 655 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

நிதியமைச்சர் சமர்ப்பித்த மதிப்பீட்டு அறிக்கையில் ஒதுக்கீட்டு விவரங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இந்தச் செலவீனத் தொகையை நிதி அமைச்சர் எப்படிச் சமாளிக்கப்போகின்றார் என்பது பெரும் கேள்விக்குறியாக இருக்கின்றது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள், தயாரித்த ஆடை உற்பத்தி, ஏற்றுமதி, உல்லாசப் பயணத்துறை, வெளிநாட்டு முதலீடுகள், உதவி வழங்கும் நாடுகளின் கடன்கள் என்பனவற்றின் உத்தேச வருமானத்தைக் கொண்டே வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்படுவது வழமை. ஆனால், இன்றைய நிலையில் இவையனைத்தும் பெரும் சரிவைக் கண்டுள்ளன.

நிதியமைச்சர் நவம்பர் 18ஆம் திகதி இதற்கான விடைகளை அளிக்கப்போகின்றார். அவரது வரவுசெலவு கசப்பாக இருக்குமா? இனிப்பாக இருக்குமா? அல்லது கசப்பையும் புளிப்பையும் கலந்து அவர் கொடுப்பாரா? பதில் நவம்பர் 18இல்தான்.





மருதமுனை புதுப்புனைவு இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் கலா பூசணம் மருதூர் வாணரை பாராட்டி பரிசளித்த நிகழ்வு அண்மையில் (2004.10.03) மருதமுனை ஸம்ஸ் மத்திய கல்லூரியில் நடைபெற்ற போது மருதூர் வாணரை ஹெரிலீஸ்ட் அமைப்பின் செயலாளர். எஸ்.எல்.றியாஸ் மாலை அணிவித்து வரவேற்பதையும் நிகழ்வில் விஷேட அதிதியாகக் கலந்து கொண்ட ரெடியாத் தலைவர் ஐ.ஏ.ஹமீட் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படமும், தகவலும்:- மருதமுனை பீ.எம்.எம்.ஏ.காதர்)

# தமிழ் மொழியிலுள்ள தனிச்சிறப்பை வேறு எந்த மொழியிலும் காணமுடியாது

## -கதிர்.பாரதிதாசன்-

(சிவம்.பாக்கியநாதன்)

தமிழ் மொழியில் எதுவும் இல்லை என்று சில கல்விமான்களும், ஆய்வாளர்களும் நினைக்கின்றனர். அதனால் தான் அவர்கள் தமிழ் மொழியில் பேசத் தயங்குகின்றார்கள்.

தமிழ் மொழியிலுள்ள தனிச் சிறப்பை வேறு எந்த மொழியிலும் காணமுடியாது.

இவ்வாறு அண்மையில் வடக்குக் கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவலர்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு யாழ் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடாத்திய தமிழ் மொழி இலக்கியப் பெரு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய மட்டக்களப்பு மாவட்ட தமிழ் நாடக மன்றத்தின் தலைவர் கதிர் பாரதிதாசன் தெரிவித்தார்.

பேராசிரியர் கா.சிவத்தம்பி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய கதிர் பாரதிதாசன் தஞ்சைப் பெருங் கோயிலைக்கட்டி, செங்கோட்டையைக் கட்டினானே. தென்னகத்துச் சிப்பி அவன் எந்த மொழியில் படித்து அதைக் கட்டினான்.

மட்டக்களப்பில் கப்பல் கட்டும் தொழில் இடம் பெற்றுள்ளது. இதற்கு ஆதாரம் உண்டு. அன்னியனின் ஆட்சிக் காலத்தில் எமது பாரம்பரிய கல்வி முறையில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது. தமிழ்க் கல்வி மான்கள் பலர் இருந்தும் அவர்கள் மீண்டும் இப்பாடங்களை பாடத்திட்டத்தில் சேர்ப்பதற்கு தயங்குகின்றனர் என்றார்.

# இரத்தத்தைப் பாலாக்கும் ஒரேயொரு இயந்திரம் தாய் மட்டுமேயாகும்

(விரி.சகாதேவராஜா)

''இரத்தத்தைப் பாலாக்கும் ஒரேயொரு இயந்திரம் தாய் மட்டுமே. ஒரு பெண்ணைப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்குவதென்பது தாயை அவமதிப்பதற்கு ஒப்பானதாகும். இலங்கையில் ஒரு மணி நேரத்துள் ஒவ்வொரு பெண் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்படுவதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்திய இணைப்பாளரும் ''சீவோ'' (CEVAW) அமைப்பின் செயற்குழு உறுப்பினருமான இரா. மனோகரன் தெரிவித்தார்.

''இல்லத்து வன்முறைகளை இல்லாதொழிக்க ஒன்றிணைவோம்'' என்ற மாவட்டமட்ட பிரசாரத்திட்டம் தொடர்பாகவிளக்க மளிக்கும் கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்:-

அமெரிக்காவில் ஒவ்வொரு மணித்தியாலத்திலும் ஆறு பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாகின்றனர்.

பாதிக்கப்பட்ட புள்ளிவிபரத் தரவுகள் இவை. பெரும்பாலும் பாதிக்கப்படாத சம்பவங்களே அதிகம்.

ஒரு பெண் பாதிக்கப்பட்டால் நீதிமன்றம் சென்று நீதி கேட்பதென்பது அவமானமாகக் கருதுவதாகவும், மற்றும் பணச் செலவு என்றும் சிந்திக்கின்றார்கள் என்றார்.

# தென் கிழக்குப் பல்கலைகழகத்தில் அக்கினிச் சுவாசம் ஒலிப்பேழை வெளியீடு

(ஜெஸ்மி.எம்.மூஸா)

இலங்கையில் பல்வேறு நிலைகளிலும் படுகொலை செய்யப்பட்டு உயிர் நீத்த சம்பவங்களை ஞாபகமூட்டும் விதமாகவும், முஸ்லிம் தேசியம் பற்றிய விடயங்களை எடுத்துக் காட்டும் விதத்திலும் ''அக்கினிச் சுவாசம்'' என்ற ஒலிப் பேழை 13.10.2004 அன்று தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

அரசியல் சங்கத் தலைவர் எம். நிலாம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பல்கலைக் கழக கலை கலாசாரப் பீடாதிபதி எம்.ஐ. எம்.கலீல் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அரசியல் துறை விரிவுரையாளர்களான அப்துல் ஜப்பார், எம். எம்.பாலில் தமிழ்த்துறை விரிவுரையாளர் என்.எம். ஷிறாப் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.10 பாடல்களைக் கொண்ட இவ்வொலிப் பேழையில் ''பெண்ணாகப் பிறந்து'' என்ற பெண்ணிலைப் பாடலை எழுதிய தென்கிழக்குப் பல்கலைக்கழக சமூகவியல் துறை மாணவன் எம்.ஐ.யூப் அவர்களுக்கு கௌரவமும் இந்நிகழ்வில் வழங்கப்பட்டது.

# அம்பாறையில் அனைத்துலக பாடசாலை நூலக வாரம் அனுஷ்டிப்பு

(விரி.சகாதேவராஜா)

அனைத்துலக பாடசாலை நூலக வாரத்தை இம்முறை வெகு சிறப்பாகக் கொண்டாட கல்வி அமைச்சு பல நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இவ்வாரம் 25.10.2004 முதல் 30.10.2004வரை கொண்டாடப்படவிருக்கின்றது.

கல்விய மைச்சின் பாடசாலை நூலக அபிவிருத்திப் பிரிவு இது தொடர்பாக சகல பாடசாலைகளுக்கும் விஷேட அறிவுறுத்த ல்களை வழங்கியுள்ளது.

இலங்கையின் தேசிய மட்ட விழா எதிர்வரும் 25ம் திகதி அம்பாறை டி.எஸ்.சேனநாயக்க மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

பிரதம அதிதியாக கல்வி பிரதியமைச்சர் மங்கள சமரவீர, சிறப்பதிதியாக வட, கிழக்கு மாகாண ஆளுனர் அசோக ஜெயவர்த்தன, கௌரவ அதிதியாக மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் இ. தியாகலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

# இடைநிறுத்தப்பட்ட பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்க மக்கள் வேண்டுகோள்

(பாண்டிருப்பு நிருபர்)

அம்பாறை இராணமடுவிலிருந்து கல்முனைக்குச் செல்லும் இடை நிறுத்தப்பட்ட பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு இப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஐ.தே.முன்னணியின் முன்னாள் அமைச்சர் பீ.தயாரெட்ணாவினால் 2002 இல் இராணமடுவிலிருந்து கல்முனைக்கு ஆரம்பிக்கப்பட்ட பஸ் சேவை சில நாட்களின் பின் திடீரென நிறுத்தப்பட்டதால் பொது மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

இடை நிறுத்தப்பட்டுள்ள இப்பஸ் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டால் 11ம்,13ம், 15ம், 07ம் கிராமங்கள், நாவிதக்வெளி, அன்னமலை, சவளக்கடை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் அரச அலுவலகங்கள், பொது மக்கள் எனப் பலர் நன்மை அடைவார்கள். இதனைக் கருத்தில் கொண்டு இப்பஸ் சேவையை ஆரம்பிக்கு மாறு பொது மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# நாவிதன்வெளிப் பிரதேச பாடசாலைகளில் அடிப்படை வசதிகள் இல்லை

## -மக்கள் கவலை-

(பாண்டிருப்பு நிருபா)

சம்மாந்துறை கல்வி வலயத்திற்குட்பட்ட நாவிதன்வெளிப் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள பல பாடசாலைகள் எதுவித அடிப்படை வசதிகளுமின்றி இயங்கி வருவதாக பொது மக்களினால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள பாடசாலைகளில் குடிநீர், மின்சாரம், சுற்று மதில், கட்டிட வசதிகள், ஆசிரியர் பற்றாக்குறை போன்ற குறைபாடுகளுடன் இயங்கி வருகின்றது. அதிலும் 07ம் கிராமம் கணேச வித்தியாலயம், அன்னமலை சிறி சக்தி வித்தியாலயம், 13ம் கிராமம் சரஸ்வதி வித்தியாலயம் 04ம் கிராம வாணி வித்தியாலயம், சவளக்கடை வித்தியாலயம் போன்ற பல பாடசாலைகள் குறைபாடுகளுடனே இயங்கி வருகின்றது. இப்பாடசாலைகளில் நிலவும் பல்வேறு குறைபாடுகளையும் நிவர்த்தி செய்ய பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டுமென பொது மக்களினால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# ஆசிரியர் சேவையில் மாற்றங்கள்; மார்கழி முடிவுக்குள் சுற்று நிருபம் வெளியாகும்

(விரி.சகாதேவராஜா)

இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக்குறிப்பில் சில குறிப்பிடத்தக்க ஆசிரியர்க்குச் சாதகமான மாற்றங்கள் ஏற்படுத்தப்படவிருக்கின்றன.

இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம் தொடர்ச்சியாக கல்வியமைச்சின் செயலாளரோடு நடாத்திய கலந்துரையாடலின் பயனாக ஆசிரியர் சேவையில் பல மாற்றங்களை ஏற்படுத்த கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

ஆசிரியர் சேவையின் ஒரு வகுப்பிலிருந்து அடுத்த வகுப்பிற்குச் சுயமாகப் பதவியுயர்வு பெறும் நடைமுறையில் பல நன்மை தரும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

ஆசிரியர் சேவையில் புள்ளிகளின் அடிப்படையில் சுயமாக பதவியுயர்வு வழங்கும் கால எல்லை 31.12.04வரை நீடிக்கப்பட்டுள்ளது. முன்னர் இக்கால எல்லை 31.12.03வரை மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

இலங்கை ஆசிரியர் சேவை தரம் ஒன்றிற்கு பதவியுயர்வு பெறுவதற்கு இதுவரை இருந்து வந்த 50 வயது நிபந்தனை நீக்கப்படும்.

20 புள்ளிகளைப் பெற்றும் 50 வயதைப் பூர்த்தியடையும் பட்சத்தில் மட்டுமே தரம் ஒன்றிற்குச் செல்ல அனுமதிக்கப்படுவர். அத்துடன் பரீட்சையில் சித்தியடைய வேண்டுமென முன்னர் கூறப்பட்டிருந்தம் குறிப்பிடத்தக்கது.

# சாந்தியும் சமாதானமும் குன்றி உலகம் அழிவுப்பாதையில் சென்றுகொண்டிருக்கிறது

## -காயத்திரி சித்தர் ஆர்.கே.முருகேசு-

(சிவம் பாக்கியநாதன்)


உலகிற்கு வேண்டிய சாந்தியும், சமாதானமும் குன்றி உலகம் அழிவுப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. மனிதன் மனிதனாக வாழ்வதை விட நடமாடும் ஓர் பயங்கரப் பிராணியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றான் இவ்வாறு கூறினார் காயத்திரி சித்தர் ஆர்.கே. முருகேசு சுவாமிகள். உலகத்தில் என்ன நடைபெறுகின்றது என்பதை விளக்கமளிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பு நேற்று முன்தினம் மாலை கல்லடி, புதுமுகத்துவாரத்தில் அமைந்துள்ள காயத்திரி பீடத்தில் நடைபெற்றது.

அவர் மேலும் கூறுகையில் : உலகினிலே தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கியுள்ளது. எங்கு பார்த்தாலும் போர் வெறி, வெள்ளம் பூகம்பம், விஞ்ஞானிகளினால் கண்டுபிடிக்க முடியாத தீராத வியாதிகளை இயற்கையில் சீற்றங்கள் மனிதனை பேரழிவுக்குள்ளாக்கிக் கொண்டிருக்கின்றன என்றார்.

# வாணிவிழாவும் சஞ்சிகை வெளியீடும்

(சரவணன்)

அக்கரைப்பற்று இராமகிருஷ்ணமிசன் வித்தியாலய அதிபர் கே.லோகிதராஜா தலைமையில் இன்று 21ம் திகதி வாணி விழா இடம் பெறவிருக்கின்றது. இவ்விழாவில்,கலை நிகழ்ச்சியும், சிறப்பு நிகழ்ச்சியாக கடந்த வருடம் வெளியிட்டு வைக்கப்பட்ட ''குருகு'' என்ற சஞ்சிகையின் இரண்டாவது இதழ் வெளியீடும் 22ம் திகதி நாளை வீதி ஊர்வலமும் இடம் பெறுவதுடன் 23ம்திகதி விஜயதசமி அன்று ஏடுதொ டக்குதல் வைபவமும் இடம் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



மட்.முதலைக்குடா மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் அதிதியாகக் கலந்து கொண்ட வே.மகேசரெத்தினம் அதிபர் மற்றும் மு.தயாநிதி ஆசிரியர் ஆகியோர் உரையாற்றுவதையும் கௌரவிக்கப்பட்ட ஆசிரியர்களையும், கலைநிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (படமும் தகவலும்:- சசி)

# சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டணி கலாசாரம்

பண்டாரநாயக்க பரம்பரைக்கு தேவைப்படும் போது கூட்டணியமைப்பதற்கும் தேவையில்லாத போது கூட்டணியை முறித்து விடவும், ஏற்றவாறு அமைந்த கட்சியே சிறிலங்கா சுதந்திரக் கட்சியாகும்.

1956ம் ஆண்டு பிலிப் பரம்பரையோடு சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டுச் சேர்ந்து அவர்களை தோளில் சுமந்து கொண்டு நாடு பூராகவும் சுற்றித் திரிந்தது. 1959ம் ஆண்டு அந்தக் கூட்டு பிளவுபட்டதும் அவர்களை தோலுரித்தது.

1970ம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான கட்சி என்.எம். பெரேரா, கலாநிதி விக்கிரம சிங்கவுடன் கூட்டணி அமைத்து அவர்களோடு கைகோர்த்துத் திரிந்தது. பின்னர் அந்தக் கூட்டணியும் பிளவுபட என்.எம். பெரேரா போன்றோரையும் கைகழுவி விட்டது.

இன்று நடைபெறுவதும் அதன் மறுபக்கமே 2004 ஜனவரியில் ஜே.வி.பியுடன் சந்திரிகா தலைமையிலான சுதந்திரக் கட்சி கூட்டணி அமைத்து அவர்களை தோளில் சுமக்கிறது எனினும் ஜே.வி.பியினரை சுதந்திரக் கட்சியில் இருந்து போகச் சொல்லாமல் புகை போட்டு விரட்டியும் அவர்களோடு அழுங்குப் பிடியாக பற்றி நிற்கின்றது. ஜே.வி.பி அத்துடன் சந்திரிகா தனது கட்சியை புகழ்ந்தும் குறிப்பிட்டிருக்கின்றார். அதாவது ஏனைய கட்சிகளைப் போன்று தனது சுதந்திரக் கட்சி நாட்டில் கொலைகளைச் செய்து கைகளில் இரத்தக் கறை படிந்த கட்சியல்ல வெறுமனே தாடி வளர்த்துக் கொண்டு சிவப்புத் தொப்பிகளை அணிந்து நாட்டில் உலாவரவில்லை என்றும் கூறுகின்றார்.

இவற்றைக் கேள்விப் பட்டு அனுரா பண்டாரநாயக்காவோ, ராஜபக்ஷவோ, ரட்ணசிறிவிக்கிரம நாயக்கவோ வாயே திறக்காதுள்ளனர். சந்திரிகாவின் இந்தக் கூற்றின் உள்நோக்கம் என்ன?

அது தான் எதிர்வரும் ஜனாதி



பதித் தேர்தலில் ராஜபக்ஷ தான் ஜனாதிபதியாகப் போட்டியிடலாம் என்று நினைக்கிறார். ஆயினும் தேர்தலில் வெற்றி பெற ஜே.வி.பியின் கூட்டு அவசியம். அதை விட கூட்டணி வேட்பாளராக போட்டியிட வேண்டுமானாலும் ஜே.வி.பியின் ஆதரவு தேவை அதனால் ஜே.வி.பியை பகைத்துக் கொள்ளக் கூடாது என்பது அனுரா, ரட்ணசிறி போன்றோரின் கருத்தாகும். ஜே.வி.பியினர் என்ன நினைக்கின்றனர். கூட்டணிக்குள் தனது

**உப்புள் ஜோசப் பர்ணாந்து**
**(லங்காதீப)**
**தமிழ் வடிவம் வடிவேல்**

முத்திரையைப் பதித்து ஜனாதிபதி வேட்பாளர் அதிகாரத்தை பெற்றுக் கொள்ள ஜே.வி.பி கருதுகின்றது. அனுராவாகட்டும், மஹிந்த ராஜபக்ஷவாகட்டும், ரட்ணசிறியாகட்டும் அல்லது ஜே.வி.பி கருதும் ஒருவராகட்டும் ஜே.வி.பியின் தாளத்திற்கேற்ப ஆடும் ஒருவரே ஜனாதிபதி வேட்பாளராக இருக்க வேண்டும்.

சந்திரிகாவுக்கும் இது நன்கு புலப்படும் ஜனாதிபதித் தேர்தலைத் தடுக்க முடியாமல் போகுமிடத்து ஜே.வி.பிக்கு வேண்டிய வகையில் அல்லாது தமக்கோ சுதந்திரக் கட்சிக்கோ வேண்டிய ஒருவரையே அவர் வேட்பாளரான நியமிக்க எண்ணுகின்றார். அவர் ஜே.வி.பியை போகச் சொல்லாமல் புகையைப் போடுவது அதற்காகவே.

இவரைப் போன்றே அன்று



1988ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது சிறிமாவோ இவ்வாறான பிரச்சினைக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. அன்றும் அவர் பொது வேட்பாளரை நியமிக்க ஜே.வி.பியுடன் பேச்சு நடாத்தினார் பேச்சுக்களில் அனுரா கலந்து கொண்டார். பேச்சுக்களின் போது ஜே.வி.பி நிபந்தனையொன்றை விதித்தது.

அதாவது அரசியல்வாதி அல்லாத ஒருவரை பொது வேட்பாளராக நியமிக்க வேண்டும் என்பதாகும். ஆனால் ஜே.வி.பி. குறிப்பிடும் வேட்பாளர் அவர்களின் விருப்பத்திற்கேற்பவே செயற்படுவார் என்பதை சிறிலங்கா சுதந்திரக் கட்சி அறிந்திருந்ததால் அதற்கு எதிர்ப்புத் தெரிவி த்தது.

இறுதியில் சிறிமாவோ வேட்பாளராக நியமிக்கப்பட்டார். எனினும் அப்போது ஜே.வி.பியானது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கைச் சின்னத்தில் போட்டியிடக்கூடாது என்ற நிபந்தனை விதித்ததுடன் வேறு ஒரு சின்னத்தில் போட்டியிடக் கோரியது அதற்கு அனுரா பண்டாரநாயக்க தலைமையிலான குழு சம்மதம் தெரிவித்த போதும் சிறிமாவோ இணங்கவில்லை. காரணம் ஒரு வேளை வேட்பாளராக மனுத் தாக்கல் செய்த பின்னர் தான் தாக்குதலில் இறக்க நேரிட்டால் அவருக்குப் பதிலாக ஒருவரை நியமிக்கும் அதிகாரம் ஜே.வி.பிக்குக் கிடைத்து விடும் என்று சிந்தித்தமையாகும். தான் தோல்வியடைந்தாலும் அதற்கு இடமளிக்கப் போவதில்லை எனக் கூறினார். அத்துடன் தேர்தலில் வென்று ஜனாதிபதியாகப் பதவியேற்றால் நிறைவேற்றதிகாரத்தை ஒழித்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு நல்ல பாடம் புகட்ட அவர் எண்ணினார்.

ஆயினும் கட்சியை காட்டிக் கொடுக்க அவர் மனம் இடம் கொடுக்கவில்லை. இறுதியில் கைச் சின்னத்தில் அவர் போட்டியிட்டார். இன்று சந்திரிகா எடுக்கும் முடிவுக்கு ஆதரவளிக்கத் தகுந்த ஒருவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் கிடையாது.



1959ம் ஆண்டு பிலிப் குணவர்த்தனா போன்றோருடன் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க மோதலில் ஈடுபட முயன்ற போது ரி.பி.இலங்கரத்ன, கலாநிதி. டி. டபிள்யூ.டி.சில்வா போன்றோர். சமரசம் செய்தனர். அதே போன்று 1975ம் ஆண்டு சிறிமாவுடன் என்.எம். பெரேரா முரண்பட்ட போதும் இலங்கரட்ண சுபசிங்க போன்றோர் அதற்க ஆதரவளித்தனர் ஆயினும் என்.எம். பெரேராவுக்கு நிதியமைச்சுப் பதவி கிடைக்காமல் விட்டதால் கூட்டணி அமைக்க முடியாது என்று பெரேரா முடிவு செய்தார். எனினும் இலங்கரட்ண சுபசிங்க, ஹெக்டர் கொப்பகடுவ ஆகி யோர் சிறிமாவோவின் முடிவுக்கு எதிர் ப்புத் தெரிவிக்கவில்லை.

இது தொடர்பாக இலங்க ரட்ண ஒரு யுகத்தின் பயணம் என்ற கட்டுரையில் தெரிவித்துள்ளதாவது அப்போதைய பிரச்சினை தொடர்பாக சுபசிங்கவும், கொப்பகடுவவும், அமைச்சரவைச் செயலாளரைச் சந்தித்துப் பேச்சு நடாத்திய போது லங்கா சமசமாஜக்கட்சியினரையும் அழைத்து தனது வீட்டில் கலந்தாலோசித்ததாகவும் வர்த்தக நிதி அமைச்சுப் பதவி, நிதியமைச்சுப் பதவியை விட மக்கள் தொடர்பில் மேலானது என்று அதனை பெரேரா ஏற்க ஏன் மறுக்கின்றார்.

எனவும் கேட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். அதற்கு கொல்வின் மக்களிடையே பெருமைக்குரியவரான என்.எம்.தனது பதவியை லங்கா சமசமாஜக் கட்சியினருக்கு வழங்குவது பொருந்தாது எனக் கருதுகிறார். என்று பதிலளித்தார். நான் ...ந்த மாற்றத்திற்கு எதிர்ப்புக் காட்டவில்லை ஆ ஆனால் சமசமாஜக்கட்சி பின்னடைவை சந்திப்பதாக அவர்கள் கருதினர். அத்துடன் என்.எம்.பெரேராவின் நிதியமைச்சர் பதவி பறிக்கப்பட்டால் ஆதரவு வழங்குவதை நிறுத்தவும் அமைச்சர் பதவியிலிருந்து நீக்கவும் லங்கா சமசமாஜக் கட்சி முடிவு செய்தது. இதனால் அரசாங்கம் பலமிழக்கும். கம்யூனிஸ்ட் கட்சியும் அந்த நிலைக்கு வந்து விடும் அதனால் மக்கள் வெறுப்படைந்து பொதுத் தேர்தல் நடைபெறலாம் பின்னர் பதவியேற்கும் ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு நாம் பணிய நேரிடும் என்றெல்லாம் கூறினேன். எனத் தெரிவிக்கும் இலங்கரத்ன இதனைக் கருத்தில் கொண்டாயினும் நிதியமைச்சுப் பதவியை வழங்கும் படி கேட்டதாகவும் அதனை சிறிமாவோ முற்றாக நிராகரித்தார். என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயங்களை பின்னர் குறிப்பில் வைத்திருப்பினும் இலங்கரட்ண சிறிமாவோவின் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்காமலே இருந்தார். அன்றைய கூட்டு முன்னணி பிளவுபட்ட போதும் இடதுசாரிகளைத் தாக்கிப் பேசி சிறிமாவுடனேயே இலங்கரட்ண காலம் கழித்தார் கட்சியையும் பாதுகாத்தார்.

ஆயினும் தற்போது சந்திரிகாவுக்கு அவ்வாறானதொரு பக்கபலம் கட்சிக்குள் இல்லை. ஜே.வி. பியினர் பற்றி சந்திரிகா முரணாக கருத்துத் தெரிவித்தாலும் ஏனைய சிறிலங்கா கட்சி உறுப்பினர்கள் மௌனமாக வே இருக்கின்றனர். ஜே.வி.பி.க்கு எதிராக வாய் திறக்கும் பல முள்ளோர் பொதுத் தேர்தலிலும் மாகாண சபைத் தேர்தலிலும் வெற்றி பெற்ற ஜே.வி.பி.யினர் வசம் அமைச்சர் பதவிகளை தானும் வழங்கிய சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஆதரவான மக்களே.

அவர்கள் கட்சிக்காக உயிரையும் கொடுப்பர் கட்சித் தலைவர்களின்



நோக்கம் ஜனாதிபதி வேட்பாளராக நியமனம் பெற்று வெற்றி பெறுதல் மட்டுமே ஆளும் கட்சி அமைச்சர்களுக்கு தமது பதவிகளை பாதுகாத்துக் கொள்வது முக்கியமானதாகத் தெரிகின்றது. அதற்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சியினை ஜே.வி.பியிடம் தாரை வார்த்தாலும் அவர்களுக்கு பாதகம் இல்லை.

சந்திரிகா அழிவைச் சந்திப்பினும் அவர்களுக்கு அக்கறை இல்லை. இன்று கூட்டணி செயற்படுவது ஜே.வி.பியினரின் விருப்பத்துக்கு ஏற்பவோ பண்டாரநாயக்கா என்று ஒருவர் இருந்ததாகவோ, சிறிமாவோ என்று ஒருவர் இருந்ததாகவோ நினைவில்லாமல் ஆகும்.

சந்தி ரிகா இன்று தலைமை வகிப்பது சிறி லங்கா சுதந்திரக் கட்சிககன்றி ஜே.வி. பிக்கே ஆகும். எனினும் சந்திரிகா ஜே.வி.பி யினரிடமிருந்து தம்மை விடுவி த்துக் கொள்ளவும் முயல்கின்றார். அது தனிப்பட அவரால் சாதிக்க முடியுமா என்பது இப்போது கூற முடியாது.

**அனுராவாகட்டும், மகிந்த ராஜபக்ஷவாகட்டும் ரத்னசிறியாகட்டும் ஜே.வி.பியின் தாளத்திற்கேற்ப ஆடும் ஒருவரே ஜனாதிபதி வேட்பாளராக இருக்க வேண்டும்.**

# உலக செய்திகள்

## புஷ்- கெரி களத்தில்; முப்பது மாகாணங்களில் வாக்குப்பதிவு



(வொஷிங்டன்)

அமெரிக்காவில் அடுத்த மாதம் 2ம் திகதி நடைபெறவுள்ள அதிபர் தேர்தலுக்கான வாக்குப் பதிவு, கடந்த திங்கட்கிழமை முதல் தொடங்கியது. 30 மாகாணங்களில் வாக்குப் பதிவு நடைபெறுகின்றது.

அமெரிக்க அதிபர் தேர்தல் அடுத்த மாதம் 2ம் திகதி நடைபெற வுள்ளது. குடியரசுக் கட்சி வேட்பாளராக தற்போதைய அதிபர் புஷ்ஷ்ம், ஜனநாயகக் கட்சி சார்பில் ஜோன் கெரியும் போட்டியிடுகின்றனர். கருத்து கணிப்புகளில் இருவரும் மாறி, மாறி வெற்றி வாய்ப்பை பெற்று வருகின்றனர். தற்போதைய நிலவரப்படி, கெரியை விட புஷ்ஷின் வெற்றி வாய்ப்பு எட்டு சதவீதம் அதிகரித்து ள்ளது.

இத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு, 15 நாட்களுக்கு முன்னதாக திங்கட்கிழமை முதலே தொடங்கியது. அடுத்த மாதம் 2ம் திகதி வாக்குப்பதிவின் போது நெரிசலை தவிர்க்கவும், வாக்குப் பதிவில் அதிக வாக்காளர்கள் பங்குப் பெறவும் இந்த முன் வாக்குப்பதிவு முறை அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி, சர்ச்சைக்குரிய புளோரிடா மாகாணம் உட்பட 30 மாகாணங்களில் வாக்குப்பதிவு நடக்கிறது. காலை முதல் மாலை வரை எந்த நேரத்தில் வேண்டுமானாலும் மக்கள் வந்து வாக்களிக்கலாம். அதற்காக, வாக்குச்சாவடிகள் திறந்தே வைக்கப்பட்டுள்ளன. மக்களும் ஆர்வத்துடன் வந்து வாக்களின் கின்றனர்.

கணனியின் மூலம் வாக்குப் பதிவு நடக்கின்றது. சில மாகாணங்களில் வாக்குச் சீட்டு முறையிலும் வாக்குப்பதிவு நடக்கிறது. வாக்குச் சாவடியில் இந்த இரண்டு வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. மக்கள் எதில் விரும்புகின்றனரோ, அதில் வாக்களிக்கலாம்.


வழக்கம் போல், புளோரிடாவில் இம்முறையும் பிரச்சினை கிளம்பியுள்ளது. முறைகேடுகள் செய்யப்படுவதாக குடியரசுக் கட்சியும், ஜனநாயகக் கட்சியும் பரஸ்பரம் குற்றம் சாட்டியுள்ளன. இது தொடர்பாக இக்கட்சி சட்டத்தரணிகள் நூற்றுக்கணக்கான புகார்களை தந்துள்ளனர். இம்மாகாணம் தவிர, ஓரிகான் மாகாணத்திலும் முறைகேடுகள் நடப்பதாக புகார்கள் குவிந்துள்ளன.

## மியான்மர் பிரதமர் வீட்டுக் காவலில் உள்ளதாக தாய்லாந்து அறிவிப்பு

(பாங்கொக்)

மியான்மர் நாட்டின் பிரதமர் கின் நியான்ட், ஊழல் குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு வீட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. மியான்மருக்கு அருகில் உள்ள தாய்லாந்து நாட்டில் இருந்து இந்த தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும், இது குறித்து திட்டமிட்ட தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை என்று தாய்லாந்து அரசு தெரிவித்துள்ளது. முன்பு பர்மா என்று அழைக்கப்பட்ட மியான் மரில் தற்போது இராணுவ ஆட்சி நடந்து வருகின்றது. இந்த நாட்டின் பிரதமராக ஜெனரல் கின் நியான்ட் இருந்து வருகின்றார். தற்போது இந்த நாட்டில் குழப்பமான சூழ்நிலை நிலவி வருவதாக தாய்லாந்து அரசு தெரிவித்துள்ளது. மியான்மர் நாட்டின் அரசியல் குழப்பம் நிலவி வருவதாக தகவல்கள் வருகின்றன. குறிப்பாக மியான்மர் நாட்டை நிர்வகித்து வரும் உயர் மட்ட குழுவிலேயே பிரதமர் மீது அதிருப்தி நிலவி வருகிறது.

## முதல்வர் ஜெயலலிதாவுடன் அரச ஊழிய சங்கத்தினர் பேச்சுவார்த்தை



(சென்னை)

அரசு ஊழியர் சங்கங்களின் தலைவர்கள், ஆசிரியர் சங்கங்களின் தலைவர்கள் ஆகியோர் தங்களது பல்வேறு கோரிக்கைகள் குறித்து நேற்று முன்தினம் அமைச்சர்கள், தலைமை செயலாளர், அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினர். இதையடுத்து நேற்று அவர்கள் கோட்டையில் முதல்வரை சந்தித்து பேசினர்.

அரசு ஊழியர் சங்கங்கள் தொடர்ந்து பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தினாலும், இனிமேல் எதுவும் அரசிடமிருந்து கிடைக்காது என்ற மனநிலையில் தான் இருந்தன. ஆனால், தற்போது அரசே திடீரென பேச்சு வார்த்தைக்கு அழைத்துள்ளது. கடந்த 17ம் திகதி முதல்வர் ஜெயலலிதா நிருபர்களிடம் பேசியபோது, தானாகவே இதுகுறித்து அறிவித்திருந்தார். நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிக்கு முதல்வர் ஜெயலலிதா கோட்டையில் ஊழியர் சங்கங்களின் பிரதிநிதி களை சந்தித்து பேசினார். அதன் பின்னர் அவர்களது கோரிக்கைகள் குறித்து முடிவெடுத்து முதல்வர் அறிவிப்பார் என தெரிகிறது

## இரும்புப் பெண்மணியின் வாழ்க்கை வரலாறு அடங்கிய நாவலுக்கு இலக்கிய விருது

(ராய்ட்டர்)

பிரித்தானியாவின் இரும்புப் பெண் என வர்ணிக்கப்படும் மாக்கிரட் தச்சரின் வாழ்க்கை வரலாறு அடங்கிய நாவலை எழுதிய பெண்மணிக்கு இலக்கிய விருது வழங்கப் பட்டுள்ளது.

1980ம் ஆண்டுகளில் பிரித்தானியாவின் மாக்கிரட் தச்சர் எனும் இந்த நாவலை எழுதிய 50 வயதான கெலனுக்கு விசேட இலக்கிய விருது கிடைத்துள்ளது. இந்த நாவலில் மாக்கிரட் தச்சரின் வாழ்க்கை வரலாறு, பிரித்தானிய அரசியனால் கலாசாரம் உட்பட அகப்பொருள் சார்ந்த விடயங்கள் பல சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாக இந்நாவல் பற்றிய கருத்துக்களை தெரிவித்த இலக்கிய விருது தெரிவாளர் கூறியுள்ளார்.

## நியூசிலாந்து பிரதமர் இந்திய தலைவர்களுடன் பேச்சுவார்த்தை



(புதுடில்லி)

இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து பிரதமர் ஹெலன் கிளார்க், இந்திய தலைவர்களுடன் நேற்று இருதரப்பு பேச்சு நடத்தினார்.

நியூசிலாந்து பிரதமராக இருந்த டேவிட் லாங்கி, கடந்த 1985ல் இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.

அதன் பிறகு அந்நாட்டு பிரதமர் எவரும் இந்தியா வந்ததில்லை. இருபது ஆண்டுகளுக்குப்பின் முதல் முறையாக நியூசிலாந்து பிரதமர் ஹெலன் கிளார்க் இந்தியா வந்துள்ளார்.

ஐந்து நாள் சுற்றுப் பயணமாக கடந்த 16ல் இந்தியா வந்த ஹெலன், ஆக்ரா, பெங்களூர், மும்பை உள்ளிட்ட இடங்களில் உள்ள சுற்றுலாத் தலங்களை பார்வையிட்டார்.

டில்லியில் நேற்று இந்திய தலைவர்களுடன் இரு தரப்பு உறவு, பரஸ்பர நம்பிக்கை, பிராந்திய மற்றும் சர்வதேச பிரச்சினைகள் குறித்து அவர் பேச்சு நடத்தினார்.

இந்த பேச்சின் மூலம் இந்தியா, நியூசிலாந்து உறவு பலப்படும் என்று மத்திய வெளியுறவு அமைச்சக உயரதிகாரிகள் தெரிவித்தனர். ஹெலனுக்கு நேற்று, ஜனாதிபதி மாளிகையில் வரவேற்பு அளிக்கப்பட்டது.


அதன்பின், ஜனாதிபதி கலாம் உள்ளிட்ட தலைவர்களுடன் அவர் பேச்சு நடத்தினார்.

## ஈராக் கெயார் நிறுவனத்தின் தலைமை பெண் அதிகாரி கடத்தல்

(பக்தாத்)

கெயார் நிறுவனத்தின் தலைமைப் பெண் அதிகாரி ஈராக்கில் வைத்துக் கடத்தப்பட்டுள்ளார். கடந்த புதன்கிழமை காலை அவுஸ்திரேலிய கெயார் நிறுவனத்தின் அறிவித்தலின் படி மேற்படி கடத்தலினால் சகல நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், ஆனால் உத்தியோகத்தர்கள் எவரும் இடமாற்றம் செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஒரு எறிகணைத் தாக்குதலில் ஈராக்கின் தேசிய



காவல்ப் படைத் துருப்புக்கள் 4 பேர் வரை கொல்லப்பட்டதாகவும் 8 பேருக்கு மேல் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதில் ஒரு அமெரிக்க ஒப்பந்தக்காரரும் கொல்லப்பட்டுள்ளார் என்றும் தெரியவருகின்றது. மேலும் அரபுத் தொலைக்காட்சி நிலையம் ஒன்றினால் ஒளிபரப்பப்பட்ட ஒளி நாடாவில் பணயக் கைதியாக ஒருவர் இருப்பதாகவும் ஒரு அறையில் தனிமையில் வைக்கப்பட்டிருக்கும் இவர் வெள்ளை நிறச் சட்டை அணிந்துள்ளதாகவும் தோற்றமளிக்கிறார் எனவும் தெரியவருகின்றது. ஆனால் இவரைக் கடத்தியவர்கள் எந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்று இதுவரைக்கும் தெரியவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.இவரது பெயர் ஹசன் என்றும் இவருக்கு வயது 60 இருக்குமென்றும் இவரது வீட்டில் இருந்து கெயார் காரியாலயத்துக்கு வரும் வழியில் வைத்துக் காணாமல் போய்விட்டதாகவும் காரில் தான் இவர் கடத்தப்பட்டுள்ளதாகவும் இவரது கணவர் தாசீன் அலி ஹசன்நேரடியாகத் தெரிவித்திருப்பதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

## சீனாவில் நிலநடுக்கம் ஏற்பட்டதனால் உயிர்ச் சேதமின்றி வீடுகள் தரைமட்டம்

(ராய்ட்டர்)

சீனாவில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் தரைமட்டமாகியுள்ளன. சீனாவின் தென்மேற்கு மாநிலத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தப் பூமியதிர்ச்சி தொடர்பாக எதிர்வு கூறப்பட்டதை அடுத்து மக்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

இதன் காரணமாக ஆயிரக்கணக்கான உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. ஐந்து றிஜிற்ரெட் அளவில் பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கம் காரணமாக உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்படாத முதலாவது சந்தர்ப்பம் இதுவென சீன அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இடம்பெற்ற நிலநடுக்கம் 6.1 றிஜிரெட் அளவில் பதிவானது. அதன் போது சுமார் 700 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## காரை வேகமாக செலுத்திய பிரான்ஸ் அமைச்சர் பிடிபட்டார்.

(ம்ார்செய்லீ)

பிரான்ஸ் நாட்டில் தேசிய வீதி பாதுகாப்பு வார விழா கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இந்த நேரத்தில் காரை வேகமாக ஓட்டியதாக அந்நாட்டு சட்ட அமைச்சர் பிடிபட்டார்.

ஐரோப்பாவில் பிரான்ஸ் நாட்டில் அதிகமாக சாலை விபத்துகள் நடக்கிறது. இங்கு ஆண்டு தோறும் எட்டு ஆயிரம் பேர் சாலை விபத்தில் இறக்கின்றனர். இதை தடுக்கும் வகையில், சாலைகளில் வாகனங்களின் வேகத்தை குறைக்க வேண்டும் என்று அரசு வலியுறுத்துகிறது. இதன் தொடர்ச்சியாக வீதிப் பாதுகாப்பு வார விழா நடத்தப்படுகிறது. இந்நிலையில், பிரான்ஸ் நாட்டின் சட்ட அமைச்சர் டொமினிக் பெர்பென் காரில் வேகமாக சென்றுள்ளார். இவரது கார் மணிக்கு 130 கிலோமீற்றர் வேகத்தில் சென்றுள்ளதை வீதி ஓரத்தில் வைக்கப்பட்டிருந்த ரேடார் கருவி கண்டு பிடித்தது. இந்தக் குற்றத்தை அமைச்சர் ஒப்புக் கொண்டார். ஆனால், நான் குற்றமற்றவன். காரின் பின் சீட்டில் உட்கார்ந்திருந்தேன். பொதுவாக காரில் செல்லும் போது அலுவல் வேலைகளை கவனித்துக் கொண்டே இருப்பது என் வழக்கம். அந்த நேரத்தில் வாகனங்களின் வேகத்தை கண்டு கொள்வதில்லை. காரை பாதுகாப்பாக ஓட்டும்படி எனது ஓட்டுனரை கூறினேன். எனது ஓட்டுனர் மிகவும் திறமைசாலி. விபத்து ஏற்படுத்த மாட்டார். கவனமாகவே வண்டி ஓட்டுவார். இருந்தும், அவர் செய்த தவறு எனக்கு தெரியாமல் போனது. தவறு எங்கு நடந்தாலும் அதற்கு தண்டனை வழங்க வேண்டும். அது யாராக இருந்தாலும் பாரபட்சம் பார்க்க கூடாது, என்று அமைச்சர் கூறினார்.

# சென்னை டெஸ்ட் தொடரின் பிழையை திருத்த வேண்டும்

## ஆலன் பார்டர் வற்புறுத்தல்

சென்னை டெஸ்ட் போட்டியை இந்தியா, அவுஸ்திரேலியா இரு அணி வீரர்களும் மறக்க மாட்டார்கள். குறிப்பாக, இந்திய அணியின் ஆட்டம் இங்கு மிகச் சிறப்பாக இருந்தது. சரியான நேரத்தில் கைப், பார்த்திவ் ஜோடி நன்றாக ஆடி அணிக்கு முதல் சுற்றில் முன்னிலை பெற்றுத் தந்தனர்.

பார்த்திவ் நன்றாகத் தான் துடுப்பெடுத்தாடினார். ஆனால் அவருக்கு கொடுக்கப்பட்ட முக்கிய பொறுப்பு விக்கெட் காப்பாளர்தானே? இதில் அவர் சரியாக செயல்படத் தவறுகிறார். முதலில் அவர் விக்கெட் காப்பாளர் கவனம் செலுத்த வேண்டும். அப்போதுதான் அணியில் தனது இடத்தை தக்க வைத்துக்கொள்ள முடியும். அனில் கும்ளே,



ஒரு ஆபத் தான பந்துவீச்சாளர் என்பதை மீண்டும் ஒருமுறை நிருபித்து விட்டார். மூன்றாம் நாளில் லாங்கர், பைடன், கில்கிறிஸ்ட் ஆகிய மூன்று முக்கிய வீரர்களை இவர் வெளியேற்றியது அபாரம். அதிலும் கில் கிறிஸ்ட், எந்த நேரத்திலும் ஆட்டத்தின் போக்கையே மாற்றக் கூடிய திறமை படைத்தவர்.

இரு தரப்பிலும் சில குறைகள் இருந்தன. அது களத்தடுப்பு. இரு அணி வீரர்களும் போட்டி போட்டுக் கொண்டு பிடி எடுக்கும் வாய்ப்புகளை வீணடித்தனர் அதுவும், விளையாடு வது அவுஸ்திரேலியா தானா?. என்று சந்தேகம் கொள்ளும் வகையில் இருந்தது களத்தடுப்பு ஒரு பிடி எடுக்கும் வாய்ப்பு ஆட்டத்தின் போக்கையே மாற்றி விடும் என்பது தெரியாதவர்கள் அல்ல, இந்தப் போட்டியில் விளையாடிய வீரர்கள். அவுஸ்திரேலிய அணிக்கு நான் சொல்லவேண்டியது இதுதான். துடுப்பாட்டம், பந்து வீச்சு இரண்டுமே நன்றாக இருக்கிறது. குறிப்பாக, இரண்டாவது சுற்றில் டேமியன் மார்ட்டின் அடித்த சதம், ஒட்டுமொத்த அணிக்கும், புதுப்பலம் கொடுத்திருக்கும்.

அதேசமயம், களத்தடுப்பு பிரச்சினைக்கு உடனே வைக்கவேண்டும் முற்றுப்புள்ளி. இவ்வளவு மோசமாக அவர்கள் களத்தடுப்பு செய்ததை நான் பார்த்ததே இல்லை. இது போன்ற தவறுகளை திருத்திக் கொள்ளாவிட்டால் தொடரின் எஞ்சிய ஆட்டங்களில் இந்தியாவை சமாளிப்பது கடினம.

# கவாஸ்கரை விட சச்சின் சிறந்தவர்

கவாஸ்கரை விடவும் சச்சினே சிறந்த துடுப்பாட்ட வீரர் என்கிறார் கிறிஸ் கெய்ர்ன்ஸ். தனியார் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்பதற்காக நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் துணைத் தலைவராக கிறிஸ் கெய்ர்ன்ஸ் மும்பை வந்துள்ளார். நிருபர்களுக்கு அவர் நேற்று முன் தினம் அளித்த பேட்டியில், சுனில் கவாஸ்கர் சிறந்த வீரர். கடந்த காலத்தின் தலைசிறந்த பந்து வீச்சாளர்களுக்கு எதிராக, தலைக்கவசம் கூட அணியாமல் விளையாடியிருக்கிறார். ஆனாலும், என்னைப் பொறுத்த வரை, சச்சின் டெண்டுல்கர்தான் சிறந்த துடுப்பாட்ட வீரர். கவாஸ்கருடன் நான் விளையாடியதில்லையே தவிர, அவர் விளையாட்டை தொலைக்காட்சியில் பார்த்திருக்கிறேன். அதேசமயம், சச்சினுடன் நான் விளையாடியிருக்கிறேன். அந்த அனுபவத்தில் கவாஸ்கரை விட, சச்சின் சிறந்தவர், ஓட்டம் எடுக்கும் வேகம், விதவிதமான துடுப்பாட்டம் என்று, சச்சினிடம் நிறைய விஷயங்கள் இருக்கின்றன, எனக் கூறினார்.




# இந்தியாவை விட்டு கைநழுவிய வெற்றி வாய்ப்பு

## ர விசாஸ்திரி

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை சமன் செய்வதற்கான அருமையான வாய்ப்பு இந்தியாவுக்கு நழுவி விட்டது. முதல் நாள் ஆட்டத்திலேயே, முத




ல் சுற்றை இழந்த அணிகள், அந்த போட்டியை ஜெயிப்பதற்கான வாய்ப்புகள் குறைவே. அப்படியும் எழுந்து வந்து, தானொரு சாம்பியன் அணி என்பதை நிரூபித்து விட்டது அவுஸ்ரேலியா.

நான்காம் நாள் கில்லெஸ்பியை விரைவில் வெளியேற்றாததுதான் ஆட்டத்தின் திருப்பு முனை. மார்ட்டின் நின்று விளையாடுகிறார் என்றால் அவர் துடுப்பாட்ட வீரர் ஆனால், பந்து வீச்சாளர் கில்லெஸ்பியை அவ்வளவு நேரம் நமது பந்து வீச்சாளர்கள் நிற்க வைத்திருக்கக் கூடாது. அவரை ஆட்டமிழக்கச் செய்திருந்தால், ஒரு வேளை அன்றே நமது அணி ஜெயித்திருக்கலாம்.

சென்னை டெஸ்டைப் பொறுத்த வரை வீரேந்தர் சேவாக், தனது இயல்பான ஆட்டத்துக்கு திரும்பியிருப்பது மகிழ்ச்சியான விஷயம். ஆனாலும், நமது துடுப்பாட்டம் இன்னும் அதிருப்தியளிப்பதாகவே இருக்கிறது. ராகுல் டிராவிட், சவுரவ் கங்குலி, லட்சுமண் ஆகியோர், இன்னும் சிறந்த ஆட்டத்துக்கு வரவில்லை. அடுத்தடுத்த போட்டிகள் நடக்க உள்ள நாக்பூர், மும்பை ஆடுகளங்கள், வேகப்பந்து வீச்சாளர்களுக்கு போதுமான அளவுக்கு ஒத்துழைப்புத் தராது. சென்னை ஆடுகளம் போல, அங்கு ஆதிக்கம் செலுத்தமுடியாது. மீண்டும் நம க்கு நெருக்கடி தர அவுஸ்ரேலியா முயற்சிக்கலாம். ஆகவே, நமது துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக விளையாடி பெரிய ஸ்கோர் செய்ய வேண்டியது, மிக முக்கியம்.

# படுவான்கரையில் மீள்குடியேறிய மக்களுக்கு அடிப்படை வசதியில்லை

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட மக்கள் புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி பல்வேறு கிராமங்களில் குடியேறினர். இருந்த போதும் மட்டக்களப்பு மாவட்டத்திலே படுவான் கரைப் பிரதேசத்திலும் போரதீவுப் பற்று பிரதேச செயலாளர் பிரிவில் மண்டூர் 14ம் கொலனி, மாலையர்க்கட்டு, பாலையடிவட்டை, நெல்லிக்காடு, 39ம் கொலனி, 38ம் கொலனி, 36ம் கொலனி, வக்கியல போன்ற கிராமங்களிலும் மீளக் குடியேறினர்.



மீளக் குடியேறியோருக்கான அடிப்படை வசதிகள் இன்னும் செய்து கொடுக்கப்படவில்லை.

போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலும், வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவிலும் மீளக் குடியேறியோர்களின் எண்ணிக்கை அதிகமாகும். வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவில் கூரியன்கட்டு கிரிமிச்சை போன்ற கிராமங்களிலும்,

இருந்தபோதும் மீளக் குடியேறிய மக்கள் பல்வேறுபட்ட சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். பாம்புத் தொல்லை, யானைகளின் அட்டகாசம், பன்றி போன்றவற்றின் பிரச்சினைகளுக்கு உள்ளாகின்றனர்.

இதேவேளை அவர்கள் சிறுசிறு குடிசைகளை அமைத்து ஜீவனோபாயத் தொழிலாக விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு, கைத்தொழில் போன்றவற்றை மேற்கொண்டு வந்தாலும் அவர்களின் ஜீவனோபாயத் தொழிலைச் செய்வதற்குரிய மூலதனமான பொருளாதார வசதி இல்லை.

## எங்கள் குரல்

சில குடும்பங்கள் ஒரு நேர உணவையும், சில குடும்பங்கள் ஒரு நாள் விட்டு ஒரு நாள் உணவையும் உட்கொள்கின்றனர். இவ்விடயம் தொடர்பாக போரதீவுப்பற்றுப் பிரதேச செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சிவலிங்கத்திடம் கேட்டபோது அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ரூபா 25,000 மீளக் குடியேறிய மக்களில் 70 வீதமான மக்களுக்கு வழங்கப்பட்டு இருப்பதாகவும், 30 வீதமான மக்களுக்கு வழங்கப்படவில்லை எனவும் அவர்களுடைய பெயர்ப்பட்டியலை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

உதவித்திட்டமிடல் பணிப்பாளர் எஸ். சிவலிங்கம் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் மீளக் குடியேறிய மக்கள் பல இன்னல்களை எதிர் நோக்குகின்றனர் என்பதனை நான் முற்று முழுதாக ஏற்றுக் கொள்கின்றேன். மீளக் குடியேறியோருக்கான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட வில்லை. போக்குவரத்து, வீடு அமைத்தல் மற்றும் சுயதொழிலில் ஈடுபடுவதற்கு அவர்களை ஊக்கு வித்தல் மற்றும் கிணறுவசதி, மலசல கூட வசதி போதாமல் இருப் பதை உதவித் திட்டமிடல் பணிப் பாளர் ஏற்றுக் கொண்டு அதனை உறுதி செய்தார்.

இவ்விடயம் தொடர்பாக போரதீவுப் பற்று பிரதேச செயலாளர் கே. கருணாகரனிடம் கேட்டபோது அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உதவிகளைக் கொண்டு மீள் குடியேறிய கிராமங்களுக்கு நான் அடிக்கடி சென்று அவர்களுடைய விடயங்களை ஆராய்ந்து அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உதவிகளை வழங்கி இருக்கின்றேன்.

போதியளவு நிதியை அரசாங்கம், அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களும் வழங்கினால் மீளக் குடியேறிய மக்களின் அடிப்படை வசதிகளை என்னால் செய்து கொடுக்க முடியும் என்றார்.

இதேவேளை மீளக் குடியேறிய கிராமங்களிலும், எல்லைக் கிராமங்களிலும் உள்ள பாடசாலைகளில் மாணவர்களின் வரவு குறைவாக இருக்கின்றது. மாணவர்களின் வரவு குறைவாக இருப்பதற்கு ஒரு காரணம் அவர்களுக்குரிய போக்குவரத்து வசதியில்லை. மற்றும் பாடசாலைளின் வசதி குறைவு மிக முக்கியமான விடயம் பெற்றோர்களுக்கு மாணவர்களை பாடசாலைக்கு அனுப்ப வேண்டும் என்கின்ற ஒரு விழிப்புணர்வு இல்லை.

ஆகவே இது தொடர்பாக கல்வி அதிகாரி ஒருவரிடம் கேட்ட போது பெற்றோர்கள் மாணவர்களை பாடசாலைக்கு அனுப்புவதற்கு



விழிப் புணர்வுக் கருத்தரங்குகளை நடாத்தி மாணவர்களின் வரவைக் கூட்ட வேண்டும் என்றார். எதுதான் எப்படி இருந்தாலும் மீள் குடியேறிய மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பது அவசியமானது.

எஸ். ரவீந்திரன்



**சிந்தனைக்கு**

ஒரு புனித இலட்சியத்திற்காக வாழ்ந்து, அந்த இலட்சியத்திற்காகப் போராடி, அந்த இலட்சியத்தை அடைவதற்காக தமது வாழ்வை தியாகம் செய்த மாவீரர்கள் மகத்தானவர்கள்

*மேதகு. வே.பிரபாகரன்.*
*தமிழீழத் தேசியத் தலைவர்*

ஈழநாதம்
கிழக்குப்பதிப்பு EEZHANATHAM
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி :- 065-2226110,
065-2226303,
batti@eezhanatham.com
21-10-2004

## படைத்துறை செலவீன அதிகரிப்பு புலப்படுத்துவது என்ன?

சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்கக் கூடிய ஒரு சூழலை ஏற்படுத்துவதில் சிறிலங்கா அரசு தாமதமான போக்கினைக் கடைப்பிடித்துக் கொண்டு இராணுவ ரீதியான பலப்படுத்தலில் அதிக அக்கறை காட்டி வருவதை சமகால அரசின் அசைவுகள் மூலம் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

சிறிலங்கா ஆளும் தரப்பின் நடவடிக்கைகள் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கக் கூடிய நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை. சமாதானம் என்ற ஒரு சொல் சதாகாலமும் உச்சரிக்கப்பட வேண்டிய அவசியத்தில் இருக்கின்றது.

''அள்ளியும் கொடுக்கமாட்டேன் கிள்ளியும் கொடுக்க மாட்டேன் ஆனால் தருவேன'' இந்தமாதிரியான ஒரு நிலைப்பாட்டில் ஆளும் கூட்டு அரசு இருந்து கொண்டு முப்படைகளையும் வலுவுள்ளதாக்கும் இராணுவத்திட்டங்களை வகுத்து வருவது குறித்து நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முதலாவது வரவு செலவுத் திட்டம் எதிர் வரும் நவம்பர் மாதம் 18ம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதில் அதிக நிதி ஒதுக்கீடு படைத்துறை செலவீனங்களுக்காக ஒதுக்கியிருப்பது குறித்து நாம் ஆழமாக நோக்க வேண்டும்.

அதாவது 5630 கோடி ரூபாவை படைத்துறைச் செலவீனங்களுக்காக ஒதுக்கியுள்ளது. அடுத்த ஆண்டிற்கான மொத்த செலவீனங்கள் 48 ஆயிரத்து 891 கோடி என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த மொத்தச் செலவீனத்தில் நாற்பது துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட செலவீனத்தில் படைத்துறைக்கான அமைச்சுக்கு அதிக செலவீனத்தை ஒதுக்கியிருப்பது சிந்திக்க வேண்டிய விடயம்.

கடந்த ஆண்டு படைத்துறை அமைச்சுக்கு 5208 கோடி ரூபாவே ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதனுடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் 422 கோடி ரூபா மேலதிகமாகும்.

தற்போது நாட்டில் போர் ஓய்வு நிலை. விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்க வேண்டும் என்பதில் ஆர்வத்துடன் இருக்கின்றார்கள். சர்வதேச சமூகம் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தி வருகின்றது. இத்தகைய சூழ் நிலையில் சிறிலங்கா அரசு அதி கூடிய தொகையை படைத்துறைக்கு செலவினமாக ஒதுக்கியிருப்பது ஏன்? இன்று நாளாந்த வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது.

அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு கோரிப் போராட்டம் நடத்துகின்றனர். அத்தியாவசியப் பொருட்களுக்கான விலை ஏற்றம் மக்கள் வீதியில் இறங்கி விலைவாசி உயர்வுக்காக போராடி வரும் நிலையில் படைத் துறை அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு அதிகளவில் இருப்பது இந்த அரசு இராணுவ நலன் சார்ந்து நிற்கின்றதை கோடிட்டுக் காட்டுகின்றது.

இவை தவிர இந்திய அரசுடன் செய்து கொள்ளவிருக்கின்ற படைத்துறை ஒப்பந்தம், பலாலி விமானத்தள விஸ்தரிப்பு, கடற்படைகளுக்கான புதிய கப்பல் கொள்வனவு போன்ற விவகாரங்கள் எல்லாம் எங்கோ அரசு சென்று கொண்டிருப்பதை தெளிவாகக் காட்டுகின்றது.

எனவே ஆளும் தரப்பு இராணுவ ஆயுதக் கொள்வனவில் காட்டும் அக்கறையை விட சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதில் சிரத்தை எடுத்து அதற்கான நம்பிக்கையை வெளிப்படுத்த வேண்டும். படைத்துறைக்கான செலவீனம் அதிகரித்திருப்பது தமிழ் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தாது.

# இன்று அம்பாறை மாவட்டத்தில் 2ம் கட்டமாக 736 பட்டதாரிகளுக்கு நியமனம்; தமிழ் 589 பேர்

(வி.ரி.சகாதேவராசா)

அரசாங்கத்தின் இரண்டாம் கட்டப் பட்டதாரி நியமனம் இன்று வியாழக்கிழமை நாடளாவிய ரீதியில் நடைபெறு கின்றது.

அம்பாறை மாவட்டத்திற்கான பட்டதாரி நியமனம் வழங்கும் வைபவம் இன்று வியாழக்கிழமை சம்மாந்துறை நகர மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் மொத்தமாக 736 பட்டதாரிகளுக்கு இன்று நியமனம் வழங்கப்படுகின்றது. இதில் கரையோரப் பிரதேசத்தில் தமிழ் மொழி மூலப் பட்டதாரிகள் 589 பேரும், அம்பாறை மேற்கு சிங்கள மொழி மூலப் பட்டதாரிகள் 147 பேரும் அடங்குவர்.

சம்மாந்துறைப் பிரதேச செயலாளர் எம்.எம்.நசீர் தலைமையில் இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறும் இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக வட-கிழக்கு மாகாண திட்டமிடல் பிரதிச் செயலாளர் டி.சுவாமிநாதன், அம்பாறை அரச அதிபர் எச்.எம்.ஹேரத் அபேதீர ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இவர்களுக்கான பயிற்சிகள் நாளை வெள்ளிக்கிழமை முதல் மூன்று மாதங்களுக்கு பிரதேச ரீதியாக நடைபெறவுள்ளன.

கல்முனை (முஸ்லிம்) பிரிவில் 173 பட்டதாரிகள் தெரிவாகியுள்ளனர். இவர்களுக்கான பயிற்சிகள் கல்முனை நகர மண்டபத்திலும், மருதமுனை நகர மண்டபத்திலும், கல்முனை பிரதேச செயலகத்திலும் நடைபெறும்.

சம்மாந்துறையில் 62 பட்டதாரிகள் தெரிவாகியுள்ளனர். இவர்களுக்கான பயிற்சிகள் சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் நடைபெறும். இறக்காமம் பிரதேச 12 பட்டதாரிகளுக்கும் இங்கு பயிற்சி நடைபெறும்.

நிந்தவூர்ப் பிரிவில் 62 பட்டதாரிகளுக்கு நிந்தவூர்ப் பிரதேச செயலகத்தில் பயிற்சி நடைபெறும்.

கல்முனை (தமிழ்) பிரிவில் 59 பட்டதாரிகள் தெரிவாகியுள்ளனர். கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறும். நாவிதன்வெளிப் பிரதேச 28 பட்டதாரிகளுக்கு பிரதேச செயலகத்தில் பயிற்சி நடைபெறும்.

சாய்ந்தமருதுப் பிரிவில் தெரிவான 52 பட்டதாரிகளுக்கும், காரைதீவில் தெரிவான 10 பட்டதாரிகளுக்கும் காரைதீவுப் பிரதேச செயலகத்தில் பயிற்சி நடைபெறும்.

அக்கரைப்பற்றுப் பிரிவில் தெரிவான 49 பட்டதாரிகளுக்கும், அட்டாளைச்சேனைப் பிரிவில் தெரிவான 29 பட்டதாரிகளுக்குமான பயிற்சிகள் அட்டாளைச்சேனை தேசிய கல்லூரியில் நடைபெறும்.

பொத்துவில்ப் பிரிவில் தெரிவான 14 பட்டதாரிகளுக்கும், திருக்கோவில் பிரிவில் தெரிவான 17 பட்டதாரிகளுக்கும், ஆலையடி வேம்புப் பிரிவில் தெரிவான 29 பட்டதாரிகளுக்குமான பயிற்சி வகுப்புக்கள் தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

முதற்கட்டமாக ஆங்கிலம், தமிழ், சிங்கள மொழிகளும், நிதி, நிருவாக நடைமுறைகள் பற்றியும் பயிற்சியளிக்கப்படும்.

இந்நிலையங்களுக்குப் பொறுப்பாக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூக சேவை உத்தியோகத்தர் ஆகியோர் பொறுப்பாயிருப்பார்கள் என கூறப்பட்டுள்ளது.

இதேவேளை அம்பாறையில் 60 பட்டதாரிகளுக்கும், உகனயில் 44 பேரும், தெகியத்தக்கண்டியில் 30 பேரும் தெரிவாகியிருப்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கு 360 மணித்தியாலங்கள் பயிற்சி வழங்கப்படும்

## அம்பாறை மாவட்டத்தில் மீள் குடியேறியோருக்கு அடிப்படை வசதியில்லை

(அ.தர்மா)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த 1990ம் ஆண்டுக் காலப்பகுதியில் ஏற்பட்ட யுத்தத்தினால் சொத்துக்களையும், உடமைகளையும் இழந்து அகதிகளாகிய மக்கள் தற்போதைய சமாதான சூழ்நிலை காரணமாக மீளக் குடியேறிய மக்கள் வசிக்கும் தமிழ்க் குடியேற்றக் கிராமங்களில் எவ்வித அடிப்படை வசதிகளும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் மக்கள் பல்வேறு கஷ்ரங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்வாறு மீளக்குடியேறிய காஞ்சிரங்குடா, பாவட்டான், தாண்டியடி, உடும்பன்குளம், தங்கவேலாயுதபுரம், கஞ்சிகுடியாறு போன்ற கிராமங்களில் போக்குவரத்து, சுகாதாரம், குடிநீர் போன்ற பல்வேறு அடிப்படை வசதிகளின்றி மக்கள் மிகவும் அவதியுறுகின்ற நிலையில் உள்ளனர்.

குறிப்பாக உடும்பன்குளம், தங்கவேலாயுதபுரம், கஞ்சிகுடியாறு போன்ற கிராமங்களில் வாழும் மக்கள் போக்குவரத்து வசதிகள் இல்லாமல் நடந்து செல்கின்றனர். அத்துடன் காட்டு மிருகங்களின் தொலைகளுக்கு மத்தியிலும் வாழ்ந்து கொண்டு வருகின்றனர்.

# அன்னமலை சிறி சக்தி வித்தியாலய ஆசிரியர்களுக்கு கஷ்ரப் பிரதேச கொடுப்பனவு வழங்கப்படவில்லை

## ஆசிரியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்

(பாண்டிருப்பு நிருபர்)

நாவிதன்வெளிப் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள அன்னமலை சிறி சக்தி வித்தியாலயத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு கஷ்ரப் பிரதேசக் கொடுப்பனவு வழங்கப்படாததையிட்டு ஆசிரியர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சம்மாந்துறைக் கல்வி வலயத்தில் அமைந்துள்ள நாவிதன்வெளிப் பிரதேசம் கஷ்ரப் பிரதேசமாகக் கணிக்கப்பட்டு அடிப்படை வசதிகள் இல்லாத பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு கஷ்ரப் பிரதேசக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றது.

அன்னமலை சிறி சக்தி வித்தியாலயம் கஷ்ரப் பிரதேச பாடசாலையாகவுள்ள போதிலும் இப்பாடசாலை ஆசிரியர்களுக்கு மேலதிக கொடுப்பனவு வழங்கப்படாததை ஆட்சேபித்து சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளரிடம் ஆசிரியர்கள் முறையிட்டுள்ளனர்.

இது சம்பந்தமாக வலயக் கல்விப் பணிப்பாளர் அண்மையில் வெளியிட்ட சுற்று நிருபத்தின் படி 1996 ஆம் ஆண்டிற்குப் பிறகு கட்டப்பட்ட பாடசாலைகளுக்கு இக் கொடுப்பனவு வழங்கப்பட முடியாது எனத் தெரிவித்துள்ளதாகவும், 1996 ஆம் ஆண்டில் இப்பாடசாலை கட்டப்பட்டதானலும் இச்சுற்று நிருபம் எமது பாடசாலையைப் பொறுத்த மட்டில் நியாய மற்றது என ஆசிரியர்கள் விசனம் தெரிவித்துள்ளதோடு தமக்கும் இக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

## கல்முனைத் தமிழ்ப் பிரதேசங்களில் இம்முறை வாணி விழா சிறப்பாக நடைபெறவுள்ளது

(அ.தர்மா)


கல்முனை தமிழ்ப் பிரதேச செயலக பிரிவில் உள்ள சேனைக் குடியிருப்பு கமு-கணேஷ மகா வித்தியாலயத்தில் இம்முறை வாணி விழா வெகு விமர்சையாக கொண்டாடப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை அதிபர் சிவப்பிரகாசம் மேற்கொண்டு வருகின்றார்

எதிர்வரும் புதன்கிழமை ஆரம்பித்து தொடர்ந்து 3 நாட்கள் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினரால் பூசைகள் நடாத்தப்பட்டு வெள்ளிக் கிழமை விஜயதசமி அன்று பாடசாலை அதிபரினால் ஏடு தொடக்கி வைக்கப்படும்.

இவ்விழாவில் ஆன்மீகச் சொற்பொழிவு வழங்குவதற்காக கல்முனையைச் சேர்ந்த டாக்டர் சிவசம்பு அவர்களும் பிரம்ம ஸ்ரீ காந்தன் குருக்கள் அவர்களும் வருகை தரவுள்ளனர்.

இந்நிகழ்வில் நாடகம், கலை விழா, தனிப்பாடல், தனி நடனம், நடனம் எனபன இடம் பெறும். இதேவேளை நாவிதன்வெளிப் பிரதேச பிரிவிலுள்ள சவளக்கடை சது-வினாயகர் வித்தியாலயத்தில் இம்முறை வாணி விழா கொண்டாடப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை அதிபர் திரு.பி. முத்தையா மேற்கொண்டு வருகின்றார்.

எதிர்வரும் புதன்கிழமை ஆரம்பித்து தொடர்ந்து 3 நாட்கள் பூசைகள் நடாத்தப்பட்டு வெள்ளிக்கிழமை விஜயதசமி அன்று அதிபரினால் ஏடு தொடக்கி வைக்கப்பட்டு கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.



அக்கரைப்பற்று சாந்திபுரத்தில் மீள்குடியேறியுள்ள குடும்பங்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்து கொடுக்கும் வகையில் இடம் பெயர்ந்தவர்களுக்கு உதவும் சர்வதேச அமைப்பு, ஐரோப்பிய ஆணைக்குழுவின் அனுசரணையுடன் உதவவிருக்கின்றது. இதற்கு முன்னோடியாக அண்மையில் அமைப்பின் திட்ட அதிகாரி எஸ். சில்வஸ்ரர், இணைப்பதிகாரி வி. சியாந்தன் ஆகியோர் மீள் குடியேறியுள்ள சாந்தி புரக் குடி மக்களை சந்தித்து நிலைமைகள் பற்றி கேட்டறியும் போது எடுக்கப்பட்ட படம்.
வி.ரி. சிவப்பிரகாசம்.

ஈழநாதம்
மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்
Eezhanatham

# சொந்த பாவனைக்கு தம்மாலோக தேரர் வாகனம் பெறவில்லை எனத் தெரிவிப்பு

(நமது நிருபர்)

**ஜாதிக ஹெலஉறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் உடுவே தம்மாலோக தேரர்மீதான குற்றச்சாட்டுத் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட விசேட ஆலோசனைக் குழு, அதன் முடிவினை வெளியிட்டிருக்கிறது.**

தம்மாலோக தேரர் எவ்விதமான வாகனங்களையும் பெறவில்லையென விசேட ஆலோசனைக் குழுவின் தலைவர் பேராசிரியர் சந்திரா கமஹே தெரிவித்திருக்கிறார்.

தேரர் அரசாங்கத்திடமிருந்து இரு வாகனங்களைப் பெற்றுக் கொண்டதாக சில ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்த இந்தத் தகவல் உண்மை க்குப் புறம்பானதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திடமிருந்து பெற்ற இரு வாகனங்களை சொந்தப் பாவனைக்கு தம்மாலோக தேரர் பயன்படுத்துவதாக, ஜாதிக ஹெல உறுமயவின் தலைமைப் பீடத்தால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எனினும் இந்தக் குற்றச் சாட்டுக்களிலிருந்து தம்மாலோக தேரரை விடுவித்துள்ளதாக ஜாதிக ஹெல உறுமயவின் தலைமைப்பீடம் அறிவித்துள்ளது.

இதேவேளை, ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் உடுவே தம்மாலோக தேரர் நேற்று உத்தியோக பூர்வ அறிக்கையொன்றை வெளியிடவிருந்த போதிலும், அதைப் பிற்போட்டுள்ளார்.

கட்சியின் ஆலோசனைக் குழுவின் வேண்டுகோளுக்கிணங்கவே தமது அறிக்கையை வெளியிடுவதை இரண்டு வாரங்களுக்குப் பிற்போட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நாளை கல்முனை உவெஸ்லி பாடசாலையில் வாணிவிழா

(எஸ்.டி.ஆர்.சலன்)

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையின் இந்து மாமன்றம் நடாத்தும் வாணி விழா நாளை வெள்ளிக்கிழமை பாடசாலையில் நல்லதம்பி மண்டபத்தில் அதிபர் பொன். முருகையா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவரும் ஓய்வு பெற்ற ஆசிரியருமான பெரியதம்பிப்பிள்ளை விஜயரெத்தினம் பிரதம அதிதியாகவும் கதை சக்கரவர்த்தி கலைமாமணி மாஸ்டர் சிவலிங்கம் கௌரவ அதிதியாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையில் இந்து மாமன்ற தலைவர் போ. நமசிவாயத்தின் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் அதிதிகள் கலந்து சிறப்பிக்க செ. விஜயரெத்தினம், மாஸ்டர் சிவலிங்கம், ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படவுள்ளனர். அத்துடன் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெறவுள்ளதாக விழாக் குழு பொறுப்பாளர் க.பேரின்பராசா தெரிவித்தார்.

# மேற்கொத்மலைத் திட்டம் இறுதித் தீர்மானம் 26ம் திகதி

(நமது நிருபர்)

மேற்கொத்மலை திட்டம் தொடர்பான இறுதித் தீர்மானம், எதிர் வரும் 26ஆம் திகதி மேற்கொள்ளப்படவுள்ளதாக, இலங்கை தொழிலாளர் காங்கிரசின் நாடாளுமன்ற உறுப்பினரும், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான முத்துசிவலிங்கம் தெரிவித்துள்ளார்

இந்த திட்டம் தொடர்பாக, நேற்று கொழும்பில் நடைபெற்ற அமைச்சு மட்டக்குழுவொன்றுடனான ஆலோசனைக் கூட்டத்திலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர்களான தினேஸ்குணவர்த்தன,சுசில் பிரேம்ஜயந்த மற்றும் முத்துசிவலங்கம் ஆகியோர் நேற்றைய கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர் இந்தக் கூட்டத்தில் எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லையென குறிப்பிட்டுள்ள முத்துசிவலிங்கம்,டெவன் மற்றும் சென்கிளயார் உட்பட 6 நீர்த்தேக்கங்களை உள்ளடக்கிய கொத்மலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் சிறிலங்கா அரசாங்கம், உறுதியாகவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் தமது கட்சிக் கொள்கைக்கமைய, டெவன் நீர்த்தேக்கத்தை உள்ளடக்கிய திட்டமொன்றினை ஏற்றுக்கொள்ளப் போவதில்லையெனவும், அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# திருமலை ஊடகவியலாளர்க்கு ஒருவாரகால பயிற்சி பட்டறை!

(எஸ்.எஸ்.குமார்)

லண்டன் தமிழோசை ஒலி பரப்பு நிறுவனம் திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த 30 தமிழ், சிங்கள, முஸ்லிம் ஊடகவியலாளர்களுக்கு தமிழ், சிங்கள மொழிமூலம் ஐந்து நாள் கொண்ட நவீன ஊடகத்துறைப் பயிற்சியினை நடாத்தவுள்ளது.

பயிற்சி நெறி எதிர்வரும் 1ம் திகதி தொடக்கம் 5ம் திகதி வரை அலஸ்தோட்ட ஓசியா அணி விடுதியில் வதிவிட பயிற்சி நெறியினை செய்யவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் திருமலையை சேர்ந்த 15 தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்களும் அதே மாவட்டத்தைச் சேர்ந்த 15 சிங்கள ஊடகவியலாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# முதலைக்குடா மகா வித்தியாலய ஆசிரியர் தினவிழா

(சசி)

மட். முதலைக்குடா மகா வித்தியாலய ஆசிரியர் தின விழா நேற்று வித்தியாலய மண்டபத்தில் மாணவத் தலைவன் சி. ஜீவிதன் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி மகா வித்தியாலய மாணவர்களும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும் இணைந்து நடாத்திய இவ்விழாவில் பிரதம அதிதியாக மாவடிமுன்மாரி அ.த.க. பாடசாலை அதிபர் வே. மகேசரெத்தினம், முதலைக்குடா மகா வித்தியாலய அதிபர் ச. சின்னத்தம்பிப்போடி, ஆசிரியர் மு. தயாநிதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் மாணவர்களால் ஆசிரியர்களுக்கு மலர் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர். இறுதியாக அதிதிகள் உரையும், மாணவர்களின் பல்வேறுபட்ட கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# வாணிவிழா

(இ.தனஞ்சயன்)

அரசடித்தீவு விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தில் வாணி விழா நேற்று கும்பம் வைத்தல் நிகழ்வுடன் ஆரம்பமாகியது. இன்று அரசடித்தீவு பழைய மாணவர்களினால் வித்தியாலயத்தில் பூஜை நடைபெற்று நாளை இரவு கலை நிகழ்ச்சியும் சனிக்கிழமை விஜயதசமி அன்று ஏடு தொடக்க நிகழ்வுடன் நிறைவுறவுள்ளது.

# மரம் நடுகை திட்டம்

(எஸ்.ரவீந்திரன்)

சக்தி தொலைக்காட்சியின் 6வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று மட். செட்டிபாளையம் மகா வித்தியாலயத்தில் மரம் நடுகை நிகழ்வொன்று நடைபெற்றது.

பாடசாலை அதிபர் சுந்தரம் ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களால் பல்வேறு வகையான மரக்கன்றுகள் பாடசாலை வளாகத்தில் நடப்பட்டது. இந்நிகழ்வில் ஆசிரியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## மாத்தறையில் ஐ.தே.க. இன்று ஆர்ப்பாட்டம்

(நமது நிருபர்)

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைக் கண்டித்து இன்று மாத்தறையில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்த ஐ.தே. கட்சி ஏற்பாடு செய்துள்ளது.

பேரினவாதக் கட்சியான ஜே.வி.பி.யின் கோட்டை எனக் கருதப்படும் மாத்தறையில் இன்று நடைபெறும் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஐக்கிய தேசியக் கட்சியின் முக் கியஸ்தர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

### வெள்ளை...

ஆதார வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி கே. முருகானந்தம் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார். இந்நிகழ்வில் கல்முனை லயன்ஸ் கழக தலைவர் கே.ஜே.எம். சக்துர், மட்டக்களப்பு லயன்ஸ் கழகத் தலைவர் ஜி. மாணிக்கராஜா தரிசனப் பாடசாலையில் முன்னாள் அதிபர் நா. விஜயராஜன் தரிசன பாடசாலை அதிபர் ஜெ. ரவீந்திரன், கல்முனை லயன்ஸ் கழகத் தலைவர் சக்கூர், மாவட்ட தலைவர் சி. வித்தியானந்தன் ஆகியோர் விசேட உரையாற்றவுள்ளனர்.

### தேசவிரோத...

இவரது சடலம் தற்போது திருமலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. 4 சூட்டுக் காயங்களுடன் இவரது சடலம் காணப்பட்டதாகவும் இச்சூட்டு நிகழ்வுடன் சம்பந்தப்பட்ட எவரும் கைதாகவில்லை. மேலதிக விசாரணையினை திருமலை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

### கல்முனை...

புரியும் திருமணமான இப்பெண்ணிடம் சக ஊழியர் ஒருவர் சேட்டை புரிய முற்பட்டுள்ளார் இவரை அப்பெண் பலமுறை எச்சரித்துள்ளார் அதனை சம்பந்தப்பட்ட நபர் அசட்டை செய்துள்ளார்.

சம்பவ தினம் அன்றும் சேட்டைவிட முயன்ற போது அலுவலகத்திற்குள் வைத்தே அந்நபரை அப்பெண் செருப்பால் அடித்துள்ளார்.

இப்பெண்ணின் துணிச்சலை பலரும் பாராட்டியுள்ளனர். வேலைக்குச் செல்லும் பெண்களை பற்றி தவறாய் நினைக்கும் இவ்வாறானவர்களுக்கு இது நல்லபாடமாய் அமைய வேண்டுமென பல பெண்கள் தமது ஆதங்கத்தையும் தெரிவித்துள்ளனர்.

### கிங்ஸ்லி...

அதே நேரம் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருக்க மக்கள் விழிப்புடன் செயற்படுமாறும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### வாகனேரியில்...

களை திருடுபவர்கள் மீதும் காடு அழிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவோர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என விடுதலைப்புலிகளின் வனவளப் பிரிவு பலமுறை பகிரங்கமாக அறிவித்திருந்தது.

இவ்வறிவித்தலை மீறி மரங்களைக் கடத்த முயன்ற முஸ்லிம் நபர்கள் விடுதலைப்புலிகளால் கண்டுப்பிடிக்கப்பட்டனர்.

இவ்வாறான சம்பவங்களில் ஈடுபட வேண்டாம் என அறிவுறுத்த விடுதலைப்புலிகள் அவர்களை அழைத்துச் சென்றனர்.செவ்வாய் இரவு அவர்களுடன் உணவு அருந்திக் கொண்டிருந்த சமயம் கருணாவின் கும்பல் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் முஸ்லிம் குடும்பஸ்த்தர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இத்துயரச் சம்பவத்தையடுத்து மட்டு. அம்பாறை துணைத் தளபதி பிரபா ஓட்டமாவடி முஸ்லிம் தலைவர்களையும், மதத் தலைவர்களையும் சந்தித்து உண்மை நிலையினை தெளிவுபடுத்தினார் அத்துடன் இறந்தவரின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இச்சம்பவத்தையிட்டு தமிழீழ விடுதலைப்புலிகள் அன்னாரின் குடும்பத்துக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துள்ளனர்.

### வீரப்பனின்...

மகன் மணி ஏற்கனவே அடக்கம் செய்யப்பட்டதால், அதே இடத்தில் வீரப்பனின் உடலையும் தகனம் செய்ய, வீரப்பனின் உறவினர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

வீரப்பனுக்கு மகன் இல்லை என்பதால், அவரது தம்பி அர்ச்சுனின் மகன் முனுசாமியை (19) வீரப்பனுக்கு கொள்ளி வைக்க அவரது உறவினர்கள் தயார்படுத்தி வைத்திருந்தனர்.

வீரப்பனின் உடல் தகனம் செய்வதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்த போது, வக்கீல் ஒருவர் வந்து அங்கிருந்த பொலிசாரிடம் சுட்டுக்கொல்லப்பட்ட வீரப்பனின் உடலை எங்களிடம் ஒப்படைத்ததுடன் உங்கள் கடமை முடிந்துவிட்டது.

ஆனால், நீங்கள் சுடுகாடு வரை வந்து உடலை தகனம் செய்ய சொல்லி கட்டாயப்படுத்துவது சரியல்ல என வாதாடினார். அதற்கு பதிலளித்த மாவட்ட பொலீஸ், வீரப்பனின் உடலை உடனடியாக தகனம் செய்ய சொல்வதற்கு காரணம், சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக தான். தர்மபுரிமருத்துவமனையில் வைத்திருந்த போதே சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டது. அதனால் தான் உடனடியாக தக னம் செய்ய சொல்கிறோம், என விளக்கினார்.

பொலீஸாருடன் வக்கீல் வாக்குவாதம் செய்து கொண்டிருந்த போது மாதையன் இரவு 10 மணிக்கு சுடுகாட்டிற்கு வந்து சேர்ந்தார். அவரும், நாளை காலை உடலை தகனம் செய்யலாம் என கூறினார். அதற்கு, அவரது உறவினர்கள் சுடுகாட்டிற்கு எடுத்து வந்த உடலை மீண்டும் ஊருக்குள் எடுத்துச்செல்லக்கூடாது என கூறினர். இதனால், ஒரு மணி நேரத்திற்கு மேலாகியும் வீரப்பன் உடல் தகனம் செய்யப்படவில்லை. இதையடுத்து நேற்று வீரப்பன் உடல் தகனம் செய்யப்பட்டது.

சேத்துக்குளி கோவிந்தனின் உடல் அவரது சொந்த ஊரான கொளத்துார் அருகில் உள்ள கோவிந்தபாடிக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு அவரது உடலுக்கு அவரது அண்ணன் வீரப்பன் நேற்றிரவு 10. 40 மணிக்கு கொள்ளி வைத்தார். பாதுகாப்பு பணியில் டி. எஸ். பி. ,க்கள் கருணாகரன், கருப்பையா ஆகியோர் தலைமையில் 100க்கும் மேற்பட்ட பொலீஸார் ஈடுபட்டிருந்தனர்.

சேத்துமணி (எ) கோவிந்தனின் உடல் தகனம் செய்வதற்காக, அவரது சொந்த ஊரான பெரம்பலூர் மாவட்டம் சாத்தப்பாடிக்கு நேற்று கொண்டு செல்லப்பட்டது. நள்ளிரவில் ஊருக்கு வந்த உடலை பார்க்க ஏராளமான பொதுமக்கள் திரண்டிருந்தனர்.

இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தில் 21.10.2004 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.